பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 18 செவ்வாய்க்கிழமை 01.05.2018 கதிர் 176

## அமைச்சரவையில் மீண்டும் ரவி எம்.பி.

கொழும்பு, மே 01

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடிக் குற்றச்சாட்டால் பதவி விலகிய முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் அமைச்சரவையில் இணைக்கப்படுகிறார் என அரச உயர்மட்டம் தெரிவித்தது.

பக்கம் 03 >>>

# தமிழர் ஐக்கியப் பலத் திரட்சியை முள்ளிவாய்க்காலில் காட்டுவோம்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அறைகூவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 01

தமிழர்களின் ஐக்கிய பலத் திரட்சி - ஒற்றுமை - நீதிக்கான வேட்கை ஆகிய வற்றை ஒன்றுசேர வெளிப்படுத்தும் களமாக மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் அணி திரள்வோம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

பக்கம் 14 >>>

## முள்ளிவாய்க்கால் நினைவிடம் மே 18 நிகழ்வுக்காகத் துப்புரவு

### பல்கலை மாணவர்கள் முன்னெடுத்தனர்



(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, மே 01

மே - 18 நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

பக்கம் 14 >>>

## சிவசக்தி முரண்டு பிடித்தமையாலேயே சில சபைகளைக் கோட்டை விட்டோம்!

### காரணம் கூறுகிறார் சத்தியலிங்கம்



வவுனியா, மே 01

வவுனியாவில் தேசியக் கட்சிகளுக்கு எதிராகத் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து ஆட்சியமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுடன் பல தடவைகள் பேசினோம். அவர் ஒத்துப்போக மறுத்துவிட்டார். இதுவே சில சபைகளைக் கூட்டமைப்பு இழக்கக் காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், மாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம்.

பக்கம் 14 >>>

### இது ரகசியம் அல்ல!

நம்பினால் நம்புங்கள். இது மிக நம்பகரமான செய்தி.

முக்கியமான - உறுதிப்படுத்தக் கூடிய - ஒரு தரப்பிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றால் அதனை 'Got Straight from horse's mouth' - என்று ஆங்கிலத்தில் கூறுவர். பக்கம் 03 >>>

## ஆசிரியைக்கும் தாய்க்கும் வீடு புகுந்து வாள்வெட்டு!

### கொக்குவிலில் நேற்று அட்டூழியம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 01

கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் அங்கு வசித்த நடன ஆசிரியையும் அவரது தாயாரையும் வாளால் வெட்டிக் காயப்படுத்தினர்.

பக்கம் 14 >>>

## இனப் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற்றுள்ளது நாடு

### மே தினச் செய்தியில் மைத்திரி

கொழும்பு, மே 01

மூன்று தசாப்த கால இனப் பிரச்சினையிலிருந்தும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தான்தோன்றித்தனமான ஆட்சியிலிருந்தும் விடுதலைப் பெற்று, பலமானதொரு

பக்கம் 14 >>>

## அபாயாவைத் தடை செய்க; இல்லையேல் போராட்டம்!

### ஞானசார தேரர் எச்சரிக்கை

கொழும்பு, மே 01

அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் முஸ்லிம் பெண்கள் முழுமையாக முகத்தை மூடும் அபாயாக்கள் அணிவதை முற்றாகத் தடை செய்வதற்கான சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு இல்லாவிடின் நாட்டு மக்கள் இதற்கு எதிராக ஒன்றிணைந்து போராட்டங்களை முன்

பக்கம் 03 >>>

## பஸ் கட்டணங்களும் அதிகரிக்கும் வாய்ப்பு

கொழும்பு, மே 01

டீசல் விலை அதிகரிப்பு மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றின்

பக்கம் 14 >>>

## 3,467 ஏக்கர் மட்டுமே இன்னும் படை வசம்

கொழும்பு, மே 01

யுத்த காலத்தில், பலாலி விமானப்படை மற்றும் ஏனைய பிரதேசங்களில், இராணுவத்தின

பக்கம் 03 >>>

## ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மீண்டும் திரைமறைவுச் சதி

### தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் வலை

கொழும்பு, மே 01

புதிதாக முன்னெடுக்கப்பட்ட கட்சி மறுசீரமைப்பினால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கியத் தேசியக் கட்சியின் ஒரு தொகுதி உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு புதிய ஆட்சியொன்றை அமைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் திரைமறைவில் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சிலருடனும் இது தொடர்பில் பேசப்பட்டு அவர்களையும் அரசின் பங்காளிகளாக இணைத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்

பக்கம் 14 >>>

## கூட்டமைப்பின் மேதினம் இன்று நெல்லியடியில்

யாழ்ப்பாணம், மே 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சர்வதேசத் தொழிலாளர் தின நிகழ்வு இன்று மாலை நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாபெரும் மே தினக்

பக்கம் 14 >>>

## நினைவாலயத்துக்கு தடை; கஜேந்திரகுமார் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 01

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் கட்டும் பணிகளை அரசு தலையிட்டுத் தடை செய்தமையைத் தமிழ்த் தேசிய மக்

பக்கம் 03 >>>

# 'நேவி சம்பத்'தைத் தப்பிக்க உதவியவர் கூட்டுப்படைகளின் தளபதி ரவீந்திரவே!

கொழும்பு, மே 01

11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேகநபரான நேவி சம்பத் எனப்படும், கடற்படை அதிகாரியை வெளிநாட்டுக்குத் தப்பிக்க உதவினார் என்று இலங்கையின் கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு கொழும்பு பகுதியில் கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் இலங்கைப் பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவு இலங்கைக் கடற்படை அதிகாரிகள் பலரைக் கைது செய்துள்ளது.




இந்த வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேகநபரான கடற்படை புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் எனப்படும், லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கொழும்பில், கடற்படை நலன்புரி பிரிவின் பணியாற்றிய வந்த போது, 2017 மார்ச் மாதத்துக்குப் பின்னர் தலைமறைவாகியுள்ளார்.

இவர் தப்பிச் செல்வதற்கு, இலங்கை கடற்படைத் தளபதியாக இருந்தபோதைய கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன உதவினார் என்று, குற்றப்புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரான சானி அபேசேகர குற்றம்சாட்டியுள்ளார்.

அமைச்சர்கள், மற்றும் உயர் மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

5 லட்சம் ரூபா பணத்தையும் கொடுத்து, அதிவேக தாக்குதல் படகு ஒன்றின் மூலம் நாட்டை விட்டுத் தப்பிக்க உதவியுள்ளார் என்று சானி அபேசேகர கூறியுள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, குற்றச்சாட்டை நிரூபித்தால் தாம் பதவி விலகத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இதுபற்றி ஊடகங்களிடம் மேலும் பேசுவதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பான வழக்கு தொடர்பாக, விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தேடப்படும் சந்தேகநபரான லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சியிடம் விசாரணை நடத்துவதற்கு கடற்படை உயரதிகாரிகள் தடைபோட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை தம்மிடம் ஒப்படைக்குமாறு 2017 மார்ச் மாதம் இரண்டு முறை கடற் படையினரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கடற்படை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தால் விரைவில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

(சு)

## வவுனியா பாடசாலையில் ஆபத்தான குளவிகள்!

வவுனியா, மே 01

வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியில் ஆபத்தான குளவி கள் காணப்படுகின்றன என அந்தப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

சுமார் 2000 மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் அண் மைக்காலமாக ஆபத்தான தேனி வகையை சேர்ந்த பெரிய குளவிகள் கூட்டமாக தங்குகின்றன என்றும் அவற்றை தம்மால் அழிக்கமுடி யாதுள்ளது என்றும் தெரிவித்த அதிபர் தற்போது 5 இடங்களில் இவ்வாறான கூடுகள் காணப்படுகின்றமையால் மாணவர்களுக்கு ஆபத்து நேரும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் நாளை (இன்று) பாடசாலைக்கு மாண வர்கள் வருகை தரும் பட்சத்தில் ஆபத்து நேர வாய்ப்புள் ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், வவுனியா நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பெரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்ற நிலையில் இந்தக் குளவிக்கூடுகள் பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவை யாக உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் அவற்றை அழிப்பதற்கு ஏதுவான நடவடிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

(சு-100)



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; நேற்று சிரமதானப் பணிகள்!

முல்லைத்தீவு, மே 01

முள்ளிவாய்க்கால் பகுதியில், மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் சிரமதானப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்க ளால் இந்தச் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ஆண்டு இறுதி யுத்தத் தின் போது முள்ளிவாய்க்காலில் படு கொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்காக ஒவ்வோர் ஆண் டும் மே 18 ஆம் திகதி முள்ளி வாய்க் கால் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் படுகின்றது.

இந்தநிலையில், எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை உணர்வுபூர் வமாக அனுஷ்டிப்பதற்காக யாழ். பல் கலைக்கழக மாணவர்கள் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண் டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

## யாழ். வணிகர் கழகத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே01

உலக தொழிலாளர் தினம் முதலாம் திகதியா கிய இன்று வடக்கு கிழக்கு மாகாணங் களில் கொண்டாடப்பட இருப்பதால் இதனை முன்னிட்டு நடைபெ றும் மே தினக் கூட்டங் களிலும், ஊர்வலங்க ளிலும் சகல ஊழியர் களையும் சகல வர்த் தக உரிமையாளர்க ளையும் கலந்து கொள் ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்திருக் கின்றது.

(இ)

## பண்டாரவளை நீதிமன்ற அறையில் தீ



கொழும்பு, மே 01

பண்டாரவளை நீதி வான் நீதிமன்றிலுள்ள தகவல் அறை நேற்றுக் காலை திடீரெனத் தீப் பற்றியுள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரும், தீய ணைப்புப்படையினரும் இணைந்து தீயைக் கட் டுப்பாட்டுக்குள் வந்துள் ளனர் என்றும் பொலி ஸார் குறிப்பிட்டனர்.

தீ விபத்துக்கான கார ணம் இதுவரை கண்ட றியப்படவில்லை என வும், பண்டாரவளைப் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டது.

(ஐ)

## இலங்கை சிறப்பு அதிரடிப் படையின் மீறல்களை அம்பலப்படுத்தும் ஜஸ்மின் சூகாவின் அறிக்கை

கொழும்பு, மே 01

இலங்கை சிறப்பு அதிரடிப் படையினரின் மனித உரிமைமீறல்களை அம்பலப்படுத்தும் அறிக்கை ஒன்றை ஜஸ்மின் சூகா தலைமை யிலான சர்வதேச உண்மை மற்றும் நீதிக் கான திட்டம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் உள்ளிட்ட மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கை காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படை மூத்த அதிகாரி ஒருவர், ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுகிறார் எனச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த அறிக்கையில், மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சிறப்பு அதிர டிப்படையைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட் டோரின் விவரங்கள் இடம்பெற்றுள்ளமை யுடன், இவர்கள் ஐ.நா அமைதிப்படையில் பணி யாற்றுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல், ஐ.நா அமைதிப் படை



நடவடிக்கைத் திணைக்களம், ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணை யாளர் பணியகம் ஆகியவற்றுக்கு அனுப்பப் பட்டுள்ளது என்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள் ளது.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் 2006-2007 காலப் பகுதியில், தமிழர்களை படு கொலை செய்வதற்கு உத்தரவிட்டார் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ள, சிறப்பு அதிரடிப் படை அதிகாரி ஒருவர், தற் போது, ஆபிரிக்க நாடு ஒன்றில், ஐ.நா அமை திப்படையில் கண்காணிப்பா ளராக பணியாற்றுகிறார் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத் தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இலங்கையர்களை ஐ.நா அமைதிப் படையில் இணைத்துக் கொள்வதற் கான ஐ.நாவின் ஆய்வு முறைகளில் இன்னமும் குறைபாடுகள் இருக்கின்ற மையையே இது காட்டுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அறிக்கையில், தமிழர்கள் கடத்தப் பட்டு சிறப்பு அதிரடிப்படையினரால் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டனர் என்பது பற்றிய, உள்ளக வாக்குமூலங்களும் இடம்பெற் றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு)

# வவுனியா வளாகம் மே 21 மீளத் திறப்பு

வவுனியா, மே 01

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்படவுள்ளதென வளாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம், வளாகத்தில் அத்துமீறிப் பௌத்த சின்னமொன்றை அமைப்பதற்குச் சிங்கள மாணவர்கள் முயன்றமையால், வளாகத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது. இதையடுத்து, காலவரையறையின்றி வளாகத்தை மூடுமாறு வளாகத்தின் முதல்வர் உத்தரவிட்டிருந்தார்.

குழப்பத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காகக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைச்சரவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு அரசில் இன்று இடம்பெறும் அமைச்சரவை மறுசீரமைப்பில், ரவி கருணாநாயக்கவுக்குச் சுற்றுலாத்துறை அமைச்சுப் பதவி வழங்கப்படுகின்றது.

ரவி கருணாநாயக்கவை புத்த சாசன அமைச்சைப் பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார். எனினும் ரவி கருணாநாயக்க அதை மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் அர்ஜுன் அலோசியஸிடம் ரவி கருணாநாயக்க ஆடம்பர இல்லத்தைப் பெற்றுக்கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனால் நிதி அமைச்சுப் பொறுப்பு அவரிடமிருந்து கடந்த ஆண்டு மே மாதம் மீளப்பெறப்பட்டு வெளிவிவகார அமைச்சு வழங்கப்பட்டது. எனினும் கடந்த ஆண்டு ஓகஸ்ட்டில் ரவி கருணாநாயக்கவுக்குக் கடும் அழுத்தம் வழங்கப்பட்டு, வெளிவிவகார அமைச்சுப் பதவியிலிருந்தும் அவர் விலக வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் இன்று நடைபெறும் அமைச்சரவை மறுசீரமைப்பில் வெளிவிவகார அமைச்சை அவருக்கு வழங்க ஐக்கிய தேசியக் கட்சியால் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

எனினும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஏற்கனவே 2015ஆம் ஆண்டு அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டு, மீளவும் கடந்த ஆண்டு இணைக்கப்பட்டவர். அவரின் அமைச்சுப் பதவியை மீளவும் மாற்றுவது சிக்கலுக்குரிய விடயம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நினைவாலயத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முன்னணி கண்டித்துள்ளது.

யாழ்.பல்கலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவாலயத்தை அரசு தடை செய்துள்ள விடயம் ஆத்திரத்தை ஏற்படுத்துகின்றது. அது ஏற்றுக்கொள்ள முடியாததும் கண்டிக்கத்தக்கதுமான விடயம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் இருக்கக்கூடிய யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகச் சமூகங்கள், முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அனுபவித்த கட்டமைப்புகளாக உள்ளன.

அவற்றில் கல்வி கற்கும் சமூகம் போராலும் இனப்படுகொலையாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களாக – அதன் வலியைச் சுமந்தவர்களாக – உள்ளனர்.

இந்த நிலையில் அவர்களின் நினைவேந்தலைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் செயற்பாடு மிகவும் ஆத்திரத்தைக் கொடுக்கின்றது.

பல்கலைக்கழகச் சமூகம் தனது முயற்சிகளைத் தொடர வேண்டும். அது ஒரு முக்கியமான முயற்சி. யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று சிங்கள மாணவர்களும் வந்து படிக்கின்ற நிலையிலே இந்த மண்ணில் வாழும் மக்களின் பாதிப்பு மற்றும் அவர்கள் மனங்களின் வெளிப்பாடு போன்றவற்றை எடுத்துக் காட்டும் செயற்பாடாக இந்தக் கட்டுமானம் அமைந்துள்ளது.

பல்கலைக்கழகத்தில்தான் இவ்வாறு உண்மைகள் பதிவு செய்யப்படவேண்டியுள்ளன. எனவே யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையில் நடைபெறும் இத்தகைய செயற்பாடுகளுக்கு எமது முழு ஒத்துழைப்பை வழங்குவோம். – என்றார். (ஐ)

## அபாயாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னெடுக்கவேண்டும்.

– இவ்வாறு எச்சரித்துள்ளார் பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசாரதேரர்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே தேசியச் சட்டங்கள் காணப்படவேண்டும். பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடைகளில் வேறுபாடுகள் மிதமிஞ்சியனவாகக் காணப்படுகின்றன. முஸ்லிம் மக்கள் சமய கலாசாரத்தைப் பின்பற்றுவதாகக் கூறி நாட்டின் பொதுவான தேசியச் சட்டங்களுக்கு முரணாகவே செயற்படுகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் மாணவ, மாணவிகளுக்கு முஸ்லிம் முறைப்படி சீருடைகளை அணியவேண்டும் என்று சில பாடசாலைகள் வலியுறுத்தி வருகின்றன. இவை ஒரு இனத்தின் தேசிய கலாசாரத்திற்குப் புறம்பானவையாகவே காணப்படுகின்றன.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் வேதனையளிக்க கூடியனவாகவே காணப்படுகின்றன. பாடசாலையில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள் முழுமையாக உடம்பை மறைக்கும் அபாயா ஆடையை அணிந்து வருவதற்குப் பாடசாலை நிர்வாகம் மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில் இரண்டு சமூக மக்கள் மத்தியிலும் விரோதங்கள் ஏற்பட்டுள்ளன.

பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக முஸ்லிம் ஆசிரியர்களின் கணவன்மார்கள் கல்வி அதிகாரிகளிடம் முறைப்பாட்டைச் செய்திருக்க வேண்டும். பாடசாலைக்குள் அத்துமீறி அதிபரை அச்சுறுத்தியமையானது கண்டிக்கத்தக்கது. நாட்டில் உள்ள தேசியப் பொதுச் சட்டங்களுக்கு முரணாகவே முஸ்லிம் மக்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அதாவது நீதிமன்றங்களில் தொப்பி மற்றும் முகத்தை மூடும் ஆடைகளை அணியக் கூடாது என்ற பொதுவான சட்டம் தேசிய பொதுப் பாதுகாப்பு நலன் கருதிக் காணப்படுகின்றது. ஆனால் இவர்கள் அதனை பின்பற்றுவது கிடையாது. தமது சமயக் கோட்பாடுகளை மதிப்பதாக கூறித் தேசியச் சட்டங்களை அவமதிக்கின்றனர். இதற்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த நிகழ்வின் பின்னர் சமூக வலைத்தளங்களில் இலங்கையின் தேசிய ஆடையான சேலையை அவமதிக்கும் பதிவுகள் இடம் பெற்றமையுடன் சிங்கள மாணவர்களின் பாடசாலைச் சீருடைகள் – குறிப்பாகப் பெண் பிள்ளைகளின் சீருடைகள் தொடர்பில் – மிக அருவருக்கத்தக்க பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. தேசிய உடையைப் பற்றி அவமதிக்கும் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு – கிழக்குப் பாடசாலைகளில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் மாணவர்கள் முஸ்லிம் மாணவர்களை போன்று ஆடை அணிய வேண்டும் என்ற முறைமை காணப்படுகின்றது. இதற்கு எதிராகத் தமிழ் மக்கள் இதுவரை காலமும் எவ்வித பிரச்சினைகளையும் தோற்றுவிக்கவில்லை. மனித வாழ்க்கையில் ஆடைகள் என்பது ஓர் அங்கமாகவே காணப்படுகின்றன. ஒருவரைத் தவறான முறையில் நோக்கிட ஆடைகள் காரணமாக அமையாது. பார்ப்பவரின் எண்ணங்களும், பார்வையும் தவறாகக் காணப்படும்போது நிகழ்வுகளும் தவறானவையாகவே காணப்படும்.

தேசிய அரசு இந்த சமூகப் பிரச்சினைக்கு விரையில் சிறந்த தீர்மானத்தை மேற் கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# யோகாசன - தியான நெறி

## நல்லூரில் சனியன்று ஆரம்பம்

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன – தியான கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் கந்தன் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நல்லூர் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதி நாள்களில் மட்டும் நடைபெறும் இவ்வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படும். ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30 - 7.30 மணி வரையிலும், பெண்களுக்கான பிரிவு அதே தினங்களில் காலை 7.30 - 8.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளன. நோயாளர்களுக்கு சிறப்பு கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும்.

சுமார் மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது போல இந்த விடயமும் I got it from horse's mouth.

தமிழர் அரசியலில் இன்று அதிகம் விவாதிக்கப்படும் விடயம் தமிழ்க் கூட்டமைப்பை விட்டு, வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரிந்து செல்வாரா, தனிக்கட்சி அமைப்பாரா என்பதுதான். அவரை ஒதுக்கிவிடுமாற்போல கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. கருத்து வெளியிட்டிருந்தாலும் கூட அவரை வெளியே விடாமல் அரவணைத்துச் செல்வதில் கூட்டமைப்புத் தலைமை உறுதியாக இருக்கின்றது என்பது அதன் தலைமையிடம் பேசும்போது தெரிந்தது.

முதல்வரை அரவணைத்துப் போகும் முயற்சிக்கு சுமந்திரனும் முழு அளவில் ஒத்துவருவார் என அடித்துக் கூறுகின்றன கூட்டமைப்புத் தலைமை வட்டாரங்கள்.

தீர்வு முயற்சிகளின் தாம் ஓரம் கட்டப்பட்டமை, அதில் கூட்டமைப்புத் தலைமை தீவிரப் போக்கும் காட்டாமை போன்ற மிக நியாயமான காரணங்கள் முதல்வர் விக்னேஸ்வரனின் ஆதங்கத்துக்குப் பின்னால் நிறையவே இருக்கின்றமையை கூட்டமைப்புத் தலைமை உணர்வதாகவும் தெரிகின்றது.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் இன்னும் நான்கு, ஐந்து மாதங்கள்தாம். அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல்கள் இப்போதைக்கு நடைபெறுமா என்பதும் உறுதியில்லை.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்ததும், உடனடியாகவே கூட்டமைப்பின் சார்பில் தீர்வு முயற்சிகளில் ஈடுபடும் பொறுப்பில் நீதியரசர் விக்னேஸ்வரனை முழு அளவில் சம்பந்தப்படுத்துவதற்கு கூட்டமைப்புத் தலைமை இப்போது தயார் என்று தெரிகின்றது.

அதற்காக உடனடியாகவே தேசியப் பட்டியல் மூலம் அவரை எம்.பியாக்குவதற்குப் கூட்டமைப்புத் தலைமை 'ரெடி'.

தேசியப்பட்டியல் எம்.பிக்கள் இருவரில் ஒருவரை இராஜினாமாச் செய்ய வைத்து, அந்த இடத்துக்கு விக்னேஸ்வரனை நியமிக்கலாம் என்றால் அதில் இரண்டு இடைஞ்சல்கள் உள்ளன.

ஒன்று – கடந்த பொதுத் தேர்தலுக்குக் கூட்டமைப்பு வழங்கிய தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் அணியில் விக்னேஸ்வரனின் பெயர் இல்லை என்பது. அப்படிப் பெயர் இல்லாதவரை எம்.பியாக்குவது என்றால் அந்தப் பட்டியலில் உள்ள ஏனையோர் அதிலிருந்து விலகும் கடிதங்களை வழங்கவேண்டும். அதன் பின் புதியவரைச் சேர்த்துக் கொள்ளலாம். பட்டியலில் உள்ள பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், எக்ஸ். குலநாயகம் போன்றோர் அதற்கு இணங்குவரா என்பது சந்தேகமே.

அடுத்தது – அவர்கள் இணங்காத பட்சத்தில், தேசியப் பட்டியலில் பெயர் இல்லாத ஒருவரை தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்க முயல்வது. இப்படித்தான் தேசியப்பட்டியலில் பெயர் இல்லாத ரட்னசிறி விக்கிரமநாயக்காவை, முன்னர் எம்.பியாக்கி, பின்னர் பிரதமராகவும் நியமித்தார்கள். ஆனால், அது தவறு என்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வாதிட்டவரே கூட்டமைப்புப் பேச்சாளரான சுமந்திரன்தான். அந்த வழக்கு அந்தப் பதவிக் காலம் முடியும் வரை இழுபட்டது. ஆனால் அதுபோன்ற பிறிதொரு வழக்கில் அப்படி நியமிப்பது தவறு என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆகையால், தீர்வு விடயத்தில் தீவிரப் போக்கைக் காட்டவில்லை என்று கூறும் விக்னேஸ்வரனிடமே தீர்வு பற்றி விடயங்களை கையாளும் பொறுப்பை நேரடியாகப் பகிர்ந்து கொள்ள கூட்டமைப்புத் தலைமை இப்போது தயார் என்றாலும், அதற்கான மார்க்கம்தான் சிக்கலாக உள்ளது என கூட்டமைப்பின் உயர்வட்டாரம் நேற்று மாலை என்னிடம் தகவல் தெரிவித்தது.

சுமந்திரனும் கூட அதற்கு இணங்குவார். விக்னேஸ்வரனை அரவணைத்து அவருக்குக் காத்திரமான பொறுப்பை அளிக்கும் மார்க்கத்தைத் தேடும் மதிநுட்பப் பணியும் கூட சுமந்திரனிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பது அந்த வட்டாரத்துடன் பேசும்போது புலனாகியது.

கூட்டமைப்பின் தலைமையிடம் ஏன் இந்தத் திடீர் மாற்றம்?

தீர்வு முயற்சியில் தள்ளாடும் இந்தச் சமயத்தில் 'ஐக்கியம் முக்கியம்' என்ற சுடலை ஞானம் ஒரு காரணமாக இருக்கலாம் என எனக்குத் தோன்றியது.

அடுத்தது – பிணக்கை விட்டு இணங்கி வாருங்கள் என்று அழுத்தம் ஏதும் 'பக்கத்தில்' இருந்து வந்திருக்குமோ?

'யாமறியோம் பராபரமே!'

-மின்னல்-

## 3,467 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரால் கையகப்படுத்தப்பட்டிருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான 27,000 ஏக்கர் காணிகளில் 3,467 ஏக்கர் காணிகள் மாத்திரமே விடுவிக்கப்படாமல் உள்ளன என பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட நிலப் பரப்புகளில், யுத்தத்தின் பின்னர் இதுவரை 23,533 ஏக்கர் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதில், பொதுமக்களுக்குச் சொந்தமான 683 ஏக்கர் காணி, கடந்த புத்தாண்டு காலத்தில் பொதுமக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புதிய வர்க்கத்தின் தோற்றம்

'இன்று மே தினம். மேதினியின் மேன் மக்களாகிய தொழிலாளர்களை ஏற்றிப்போற்றி, மதிக்கும் மேன்மையான நாள். உழைக்கும் மக்களின் உயர்வை உன்னதத்துடன் உவக்கும் நாள்.

மனித வாழ்வுக்கு ஆதாரமாக – அடிப்படையாக – அமைவது உழைப்பு. அதுவே நம் வாழ்வை நெறிப்படுத்தி மேம்படுத்துகின்றது. மனித வாழ்வை பொறுத்தவரை பொருளாதாரம் அத்தியாவசியமானது. தனி மனித வாழ்வுக்கு மட்டுமல்ல, சமூகங்கள் கடந்து தேசங்கள் வரை – ஏன் முழு உலகினதும் கூட – செயற்போக்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமைவது பொருள் உற்பத்தியே. அதுவே தனி மனிதன், குடும்பம், சமூகம் எனப் பரந்து, தேசங்களையும் கடந்து, முழு உலகினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் காரணியாகின்றது. ஆகையால் நமது வாழ்வின் அடிப்படைகளில் பிரதானமானதாகின்றது. பொருள் உற்பத்தியின் மையமான பொருளாதாரம். அதுவே நமது இயக்கத்தின் அடித்தளம். அதன் மீதே தனி மனிதர்களினதும் முழு உலகினதும் மற்றெல்லா விடயங்களும் கட்ட விழுகின்றன.

அந்தப் பொருண்மியத்தின் உயிர்த்துடிப்பாக – ஜீவனாக – அமைகின்ற தொழிலாளியை – உழைப்பாளியை – மதித்து, அவனுக்குரிய உரிமைகளையும், அடிப்படைகளையும் உறுதிப்படுத்துவதற்கு பிரதிக்ஞை செய்யும் தினம் இன்று.

மனிதன் நிலத்தைப் பகிர்ந்து விவசாயம் செய்யத் தொடங்கிய காலத்திலேயே வர்க்கங்கள் பிறந்து விட்டன. சுரண்டலும், சுரண்டப்படுதலும் ஆரம்பித்து விட்டன.

சாம்ராஜ்யங்களின் கீழ் ஆண்டான் – அடிமை என்ற வர்க்க வேறுபாடுகள் ஊற்றெடுக்க – பிரபுத்துவ உற்பத்திய வடிவம் தோற்றம் பெற்றது; அது முதலாளியமாக உருவெடுத்தது. முதலாளி – தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடு நிலை கொண்டது.

'தொழிலாளர்களைச் சுரண்டி, ஊதிப் பெருக்கும் முதலாளியம் தொடர்பில் தத்துவாசிரியர் கார்ல் மார்க்ஸ் தனது 'மூலதனம்' நூலில் ஒரு தீர்க்கதரிசனம் காணுகின்றார்.

*"முதலாளியத்தின் பெருவளர்ச்சி, முதலாளிய – தொழிலாளர் வர்க்கங்களை இரு துருவப் பிளவிற்கு இட்டுச் செல்லும். பெரு மீன்கள் சிறு மீன்களை விழுங்குவது போல, பெரு முதலாளிகள், சிறு முதலாளிகளை ஏப்பம் விட, முதலாளி தொகை பெருகும். சுரண்டல் அதிகரிக்கும். தொடர்ச்சியாக வறுமையின் விளிம்புக்கு பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும். சகித்துக் கொள்ள முடியாத துன்பத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். இவ்விதம் உள் முரண்பாடாக எழும் நெருக்கடியினால் முதலாளியம் தனது புதைகுழியைத் தானாகவே தோண்டிக் கொள்ளும். அதன் புதைகுழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும்."*

– இப்படி கார்ல் மார்க்ஸின் தீர்க்கதரிசனத்தை விவரிக்கின்றார். 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.

உண்மையில் கார்ல் மார்க்ஸின் இந்தத் தீர்க்கதரிசனம் இன்று வரை வெறும் கனவாகவே தொடர்கின்றது.

முதலாளித்துவம் தகர்ந்து விழும் என்றும் அதன் சமாதியிலிருந்து பொதுவுடைமை சமுதாயமாக சோசலிசம் தோன்றி வளர்ந்து, உலகெங்கும் பரவி, அதன் உயர்நிலைப் பரிணாம வளர்ச்சியாக கம்யூனிஸ சமூகம் தோன்றும் என்றும் மார்க்ஸியத்தின் தந்தையர் கண்ட கனவு பலிக்கவே இல்லை என்கின்றார் அன்ரன் பாலசிங்கம்.

கார்ல் மார்க்ஸ் கூறியமை போல தொழிலாளர் வர்க்கம் சுரண்டப்படுவதும், அது எண்ணிக்கையில் உயர்ந்து உழல்வதும் கூட நடந்தேறுகின்றது. ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கவில்லை. முதலாளியம் தனக்குத் தானே புதைகுழியைத் தோண்டவில்லை. மாறாக, அது மேன்மேலும் தன்னைப் பலப்படுத்தி அரணமைத்துத் தன்னை நெருங்கமுடியாத வகையில் தனது பிடியை வலுவாக இறுக்கி வருகின்றது.

ஆனாலும், *'முதலாளியத்தின் புதைகுழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும்'* என்ற கார்ல் மார்க்ஸின் கூற்று நடந்தேறியிருப்பதாகவே தோன்றுகின்றது.

கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்' எழுந்த காலத்தில் நவீன கணினி யுகம் பற்றிய தீர்க்கதரிசனம் இருந்திருக்காது போலும்.

இன்று உலகையே ஆட்டிப்படைக்கும் – ஏன் இயக்கும் – தவிர்க்கவே முடியாத கட்டமைப்பாக நம்மைப் பற்றிப் பிடித்து சுற்றிவளைத்து இறுக்கி வருகின்றது கணினி யுகம்.

இந்த யுகத்திலே, அதன் உரிமையாளனான முதலாளியோ அல்லது அதனைக் கட்டமைக்கின்ற தொழிலாளியோ முக்கியமானவர்கள் அல்லர். முதலாளியையும், தொழிலாளியையும் புறந்தள்ளி ஒரு சமூகம், ஒரு வர்க்கம் – இந்த இரண்டுக்கும் இடையாக – உட்கிடையாக – பிறந்து, அத்தியாவசியமான தரப்பாகக் காலூன்றி நிற்கின்றது. அதுதான் கணினி என்ற மூளை மையத்தை இயக்கும் 'அறிவார்ந்த சமூகம்.'

கணினி கூட ஓர் உற்பத்தி வடிவம்தான். ஆனால் அந்த உற்பத்தி வடிவத்தில் அதை உற்பத்தி செய்யும் தொழிலின் முதலாளியை விட, அதனை உற்பவிக்கும் திறன் கொண்ட மூளைசாலி – தொழில்திறன்சாலியே – உயர்ந்து நிற்கின்றான். முதலாளியின் உத்தரவுகளுக்கு அமைய இயங்கிய தொழிலாளியம் போய், கணினியின் மூளை மையமாகச் செயற்படும் தொழில்திறனாளியை மீறிச் செயற்பட முடியாத ஒரு முதலாளியத்தை உலகம் இன்று சந்தித்து நிற்கின்றது.

முதலாளியையும், தொழிலாளியையும் முந்தி நிற்கும் இந்தப் புதிய வர்க்கத்துடனான யுகப் புரட்சி இனிக் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

# மே தினத்தில் மாற்றம் வருவதற்கு பௌத்தத் தலைவர்களே காரணம்

## கூறுகிறார் அமைச்சர் வஜிர



கொழும்பு, மே 01

பௌத்த மதத்தின் முக்கியத் தலைவர்களின் கோரிக்கைக்கு அமையவே, மே தின நிகழ்வுகள், மே 7ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தேவகிரி ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசு எவ்வாறு மேனத்தை மே 7ஆம் திகதிக்கு மாற்றியது? எனப் பல தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ள விடயத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் ஸ்மாட் வகுப்பறைகள் திறந்துவைப்பு



கிளிநொச்சி, மே 01

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் தேவை கருதி பாடசாலைச் சமூகத்தால் கோரப்பட்டதற்கமைவாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நவீன வசதிவாய்ப்புக்கள் கொண்ட ஸ்மாட் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டமையுடன் கணினிகளும் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மேற்படி வித்தியாலய அதிபர் ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினராக கரைச்சிக் கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் கே.குமரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது இவ் வித்தியாலயத்தில் தரம் - 3 இல் கல்வி கற்கும் மாணவர்களது பெற்றோர்களின் நிதிப் பங்களிப்பில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மேலைத்தேய இசைக் கருவிகளடங்கிய பாண்ட் வாத்தியத் தொகுதியும் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# சஜித்துக்கு கூடுதல் அதிகாரம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருக்கு, கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும் என்றும், வெற்றியை நோக்கிப் பயணிப்பதற்காக கட்சியை மேலும்பலப்படுத்தவுள்ளதாகவும் அந்தக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, தெரிவித்துள்ளார். ஐ.தே.கவில் கடந்த வியாழக்கிழமை உறுதிப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் நாளாந்த நடவடிக்கைகளைச் சிறப்பாகக் கொண்டு செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அண்மைய மாற்றங்களை, கட்சியின் இளைய உறுப்பினர்களே முன்னின்று மேற்கொண்டனர் என்பதைச் சுட்டிக்காட்டிய ரணில், கட்சியின் இலக்கை அடைவதற்காக, இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய பொறுப்புகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி, அதன் ஆதரவாளர்களையும் மக்களையும் செவிமடுக்கின்ற ஒரு கட்சியாகும். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், மக்களால் எமக்கு வழங்கப்பட்ட செய்தியை, நாங்கள் உரிய வகையில் வாசித்து, அடையாளங் கண்டுள்ளோம். அதைத் தொடர்ந்து, தேவையான மாற்றங்களை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் எனவும் ரணில் கூறினார். (ஐ)

# விநாயகபுரம் சனசமூக நிலையம் விரைவில் மக்களின் பாவனைக்கு



பளை, மே 01

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு இரண்டு மாதங்களாக மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படாத இயக்கச்சி விநாயகபுரம் சனசமூக நிலைய கட்டடம் குறுகிய காலத்திற்குள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும் என பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சுரேன் தெரிவித்தார்.

அந்தப் பிரதேச மக்களின் தொடர்ச்சியானவேண்டுகோளுக்கு இணங்க நேரில் சென்று மக்கள்,மற்றும் பொது அமைப்புக்களின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடியபோது அவர் இதனைக் கூறினார். அத்துடன் கிராமத்தின் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து உரிய தரப்பினருக்கு அறிவித்துத் தீர்வு பெற்றுத் தரப்படும் எனவும் தெரிவித்தார்.

இங்கு தவிசாளருடன் உப தவிசாளர் மு.கஜன், சபை உறுப்பினர்களான ரமேஷ் மற்றும் வீரவாகுதேவர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (ஐ)

**நாளை**

02.05.2018
புதன்கிழமை

நட்சத்திரம்: அனுசம் மாலை 5.58 வரை
திதி: துதியை மு.ப 8.00 வரை

சுபநேரம்: 4.27 – 5.57 வரை
இராகுகாலம்: 11.57 – 1.27 வரை

# கரைச்சிப் பிரதேச சபைக்குரிய வீதியில் புதிய பாலம்; வாழ்நாள் பிரச்சினை தீர்க்கப்பட்டது என மக்கள் நன்றி!





முல்லைத்தீவு, மே01

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலம் 9 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்

33 மீற்றர் நீளமும் 4.2 மீற்றர் அகலமுடைய இந்த பாலத்தின் கொங்றீட் பணிகளுக்கு, 35 மில்லியன் ரூபாவும், இரும்பு பாலத்துக்கு 55 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டு புதிய பாலம் அமைக்கப்பட்டு

மேற்படி பாலம், ஆயிரம் பாலம் திட்டத்துக்குக் கீழ் கொண்டுவரப்பட்டதோ அல்லது தற்போது ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டமோ அல்ல.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர், ஐக்கிய இராஜ் ஜியத்தின் நிதியுதவியுடன், 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் தற்போது நிறைவுற்று மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் தெரி வித்துள்ளனர்.

காலநிலை மாற்றம் காரணமாக ஏற்பட்ட மழையால் புதுமுறிப்புக் குளத்தில் நிரம்பிய நீர் காரணமாக பாலத்தின் புனரமைப்பு பணிகள் தாமதம் ஏற்பட்டது எனவும் இல்லை எனில் கடந்த வருடமே காலத்தின் பணிகள் நிறைவு பெற்றிருக்கும் எனவும் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பிரதேச சபைக்கு சொந்தமான வீதி ஒன்றுக்கு 90 மில்லியன் ரூபா செலவில் புதிய காலம் ஒன்றை அமைத்து தங்களின் வாழ்நாள் பிரச்சினைக்கு தீர்வினை வழங்கிய வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கடந்த காலத்தின் அரசியல் தரப்பினர் களுக்கும் தங்களின் மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம் என ஊற்றுப்புலம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-70)

# நுவெரெலியா ஹாவெலியாவிலுள்ள முத்துமாரியம்மன் முத்தேர் பவணி!



கொழும்பு, மே 01

இலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க நுவெரெலியா ஹாவெலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமி முத்தேர் பவணி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சித்திரா பௌர்ணமி தேர்த் திருவிழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை தீர்த்த ஊர்வலம் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதாகிருஸ்ணன் கலந்துகொண்டார்.

லேடிமெக்கலம் டிரைவ் பகுதியில் புனித நீர் எடுக்கப்பட்டு அந்த நீர் ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு விசேட பூஜைகள் நடைபெற்றதுடன் அடியார் களுக்கு அன்னதானமும் இதன்போது வழங்கப்பட்டது.

# 17 எருமை மாடு கன்றுகள் முல்லைத்தீவில் திருட்டு!



முல்லைத்தீவு, மே 01

முல்லைத்தீவில் 17 எருமை மாடு கன்றுகள் திருடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு ஆண்டான் குளம் பகுதியிலுள்ள மூன்று எருமைமாடு பட்டிகளிலிருந்து நேற்று முன்தினம் ஒரே இரவு 17 எருமைமாட்டுக் கன்றுகள் திருட்டுப்போயுள்ளன என முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரே இரவில் முல்லைத்தீவு குமுழமுனை ஆண்டான்குளம்பகுதிகளிலுள்ள மூன்று எருமைமாட்டு பட்டிகளிலிருந்த, எருமை மாடு கன்றுகள் 17 இனந்தெரியாத நபர்களினால் திருடப்பட்டுள்ளன என நேற்றுக் காலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளனர்.

# மட்டு. சிறையிலிருந்து 5 கைதிகள் விடுதலை!



கொழும்பு, மே 01

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஐந்து கைதிகள் பொதுமன்னிப்பில் நேற்று முன்தினம் காலை விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் தினத்தை முன் னிட்டு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலை யில் பல்வேறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று வந்த ஐந்து கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் கே.எம்.எச்.யு.அக்பர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கைதிகள் மட்டக் களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் கே.எம்.எச்.யு.அக்பர் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பதில் சிறைக்காவலர் கே. மோகன்ராஜ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள், சிறைச்சாலை நலன்புரி உத்தியோகத் தர்கள் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மழைக் காலநிலை நிலவுகின்றபோதும் வறட்சியால் 6 இலட்சம் பேர் பாதிப்பு!

கொழும்பு, மே 01

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவுகின்ற போதும், 6 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையில் மாற்றம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், மத்திய, ஊவா, வடமேல் மாகாணங்களில் இரவு நேரத்தில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சப்கரமுவ, மத்திய மாகாணங்களில் மாலை வேளையில் பனிமூட்டமான காலநிலை நிலவும் எனவும் அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 01

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, எஹெலியகொட, எலபத, குருவிட்ட மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில் இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித் துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் தினங்களில் அதிக மழையுடனான வானிலை காரணமாக மண்சரிவு மற்றும் மண் மேடுகள் சரிந்து விழும் சாத்தியம் உள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.



# மட்டக்களப்பில் வெசாக் நிகழ்வு!



கொழும்பு, மே 01

மட்டக்களப்பு மாவட்ட வெசாக் நிகழ்வுகள் செங்கலடி பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட மங்களகம ஸ்ரீ தர்மராமய விகாரையில் விகாரதிபதி பி.சந்தரத்தன ஹிமியின் ஆசிகளுடன் மாவட்ட அரச அதிபர் மா. உதயகுமார் தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில், மாவட்ட செயலகத்தின் ஆலோசனையின் கீழ், ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இதன்போது வெசாக் பந்தல்களும் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன. இந்த நிகழ்வில் இந்து, இஸ்லாம் மதகுருமார்களும், மாவட்ட செயலக உயரதிகாரிகளும், பிரதேச செயலக உயரதிகாரிகளும், செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, மே. 01

ஓட்டோக்களின் பயண கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் மற்றும் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

150ரூபாவுக்கு அதிகமாக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை அதிகரிக் கப்பட்டால் ஓட்டோக்களின் கட்டண மும் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் தீர்மானத்திற்கமைய தான் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரி வித்துள்ளார்.

சாதாரண மாற்றம் தொடர்பில் தாம் கட்டணங்களை அதிகரிப்பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 150 ரூபாவை விடவும் அதிகரித்தால் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தினசரி ராசி பலன் (01.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதமைத்திதி. காலை 6.48 மணி வரை பின்னர் துவிதீயை. நட்சத்திரம்: விசாகம் மாலை 3.56 மணி வரை. பின்னர் அனுஷம். மரணயோகம் மாலை 3.56 மணி வரை. பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - மாலை 3.14 மணி முதல் 4.47 மணி வரை.
**சுபநேரம்** - முற்பகல் 10.23 மணி முதல் 11.53 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை துவிதீயை.
**பிறந்த நட்சத்திர வழிபாடு** - விசாகம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். தொழிலில் மந்த நிலையே காணப்படும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடும். வியாபாரத்தில் சுமாராக இலாபம் கிடைக்கும்.

**ரிஷபம்** - யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சிலருக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். அரச சலுகையால் வீடு, காணி என்பன சிலருக்கு கிடைக்கும்.

**மிதுனம்** - ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும்.

**கடகம்** - சலனம் மிகுந்த நாள். சங்கடங்கள் சில உண்டாகும். உத்தியோகத்தர்கள் பணிகளில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம். குடும்பத்தில் பணப்புழக்கம் திருப்தி தராது.

**சிம்மம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரம் குறைந்த பட்சலாபத்தை அடையும். குடும்ப நிர்வாகத்தில் பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகள் உண்டாகும். உடல் நலத்தில் அக்கறை தேவை.

**கன்னி** - உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். சகோதர உறவுகள் வலுவடையும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**துலாம்** - மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். பகையாய் இருந்த உறவினர்கள் மீண்டும் விடு தேடிவருவார்கள். சகோதர உறவு பலப்படும். ஆடை ஆபரணங்கள் சேரும்.

**விருச்சிகம்** - சஞ்சலமான நாள். உத்தியோகத்தர்களுக்கு விருப்பமில்லாத இடமாற்றங்கள் திடீரென ஏற்படும். தொழிலில் சிறிய அளவில் வளர்ச்சி இருந்து வரும். கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும்.

**தனுசு** - யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். மாணவர்கள் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டாகும்.

**மகரம்** - மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும்.

**கும்பம்** - இனிமையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பியபடி ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். பணம் சரளமாகப் புழங்கும்.

**மீனம்** - கீர்த்தியான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். உடலாரோக்கியம் சிறப்படையும். உத்தியோகத்தில் இவர்களின் திறமையால் பாராட்டப்படுவர்.

சந்திராஷ்டம நாள்: பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# முஸ்லிம் ஆசிரியைகள் 'பர்தா'வுடன் வரட்டும்
# 'ஹபாயா' பிடிவாதம் திடீரென ஏனோ?

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியைகள் மூவர் இணைக்கப்பட்டு, அவர்கள் தது கடமைகளை செய்து வந்தனர். அவர்கள் இக் கல்லூரியின் உடை நியதிகளுக்கு அமைய சேலை அணிந்தே வந்தனர்.

ஆனால், திடீரென்று அவர்கள் முஸ்லிம் பெண்கள் அணியும் 'ஹபாயா' உடை அணிந்தே கல்லூரிக்கு வருவோம் என பிடிவாதம் பிடிக்கின்றனர். இது அங்கு சர்ச்சையாக மாறியுள்ளது.

முஸ்லிம் ஆசிரியைகள் கல்லூரிக்கு வெளியே தாம் விரும்பிய உடை அணிந்து செல்லலாம். ஆனால் அவர்கள் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியைகளுக்கான உடை ஒழுங்கு விதியின்படி செயற்படுவதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் உருவாகியுள்ள முஸ்லிம் ஆசிரியைகளின் ஆடை விவகாரம் தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அது தொடர்பில் மிக விரிவான பதில் கடிதம் ஒன்றை ரிஷாத்துக்கு அனுப்பியுள்ளார் சம்பந்தன். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எனது தலைமைத்துவம் பற்றியும் மக்கள் மத்தியிலும் தங்களுக்கும் என்மீது உள்ள மதிப்புப் பற்றியும் தாங்கள் சிறப்பாகக் குறிப்பிட்டமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக எனது நிலைப் பாட்டை அறியத் தருகின்றேன்.

தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்கள் தொடர்பாக எமது தலைவர் தந்தைசெல்வநாயகம் பின்பற்றியதும், அவரைத் தொடர்ந்து தலைவர் அ.அமிர்தலிங்கம் பின்பற்றியதுமான, நாம் தமிழ் பேசும் மக்கள் என்ற கொள்கையை நானும் தொடர்ந்து பின்பற்றி வருகின்றேன் என்பதை மக்களும் நீங்களும் நன்கு அறிவீர்கள்.


வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களில் தமிழ் பேசும் மக்களுடைய நிலங்கள் அவர்களுடைய கலாசார, பாரம்பரியங்கள் பாதுகாத்துப் பேணப் படவேண்டும் என்ற அடிப்படையில் பண்டார நாயக்கா – செல்வநாயகம் ஆகியோரால் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலும் பின்பு டட்லிசேன நாயக்கா – செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்பட்ட அதே கொள்கையின் படியே எனது அரசியற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

## ரிஷாத்துக்கு சம்பந்தன் விளக்கமான கடிதம்

அந்த வகையில் தமிழ் – முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக குறிப்பாகஎனது தொகுதியான திருகோணமலையிலும் பொதுவாக இந்நாட்டிலும் நானும் நான் சார்ந்த அரசியல் கட்சிகளும் எம்மால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்து வருகின்றோம்.

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி 95 ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மகளிர் கல்வி கற்பதற்காக இந்து சமயப் பெண்மணியான தங்கம்மா சண்முகம்பிள்ளை என்ற கொடையாளியினால் தனது சொந்தப் பணத்திலும், சொந்தநிலத்திலும் இந்து மகளிரின் கல்வி மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒரு பாடசாலையாகும்.

1960களுக்குப் பின்னர் இந்தப் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னர் இங்கு இந்து மகளிர் மாத்திரம் உயர் கல்வி கற்றுவந்ததோடு, இந்து கலாசார பாரம் பரியங்களும் பின்பற்றப்பட்டு வந்த வரலாறு உண்டு. தனியார் பாடசாலைகளைப் பொறுப் பேற்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் கிறிஸ்தவ பாதிரிமார்கள் நடத்திய பிரபல பாடசாலைகளும், அதே போன்று இந்து மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வந்த பாடசாலைகளும் பொறுப்பேற்கப்பட்ட போதும், அவற்றின் பெயர், கலாசாரம், கல்விமுறை என்பன மாற்றங்களுக்கு உட்படாமல் தொடர்ந்து பேணப்படும் என்ற அடிப்படையிலேயே அவை பொறுப்பேற்கப்பட்டன. இந்த நிலைமையே தொடர்ந்தும் அவ்வாறான அநேக பாடசாலைகளில் பேணப்பட்டு வருவதைத் தாங்களும் அறிவீர்கள்.



இதன் அடிப்படையிலேயே திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியிலும் அதன் ஆரம்பகால மரபுகள் பேணப்பட்டு வருகின்றமையோடு, இன்று தேசியப் பாடசாலை யாக அங்கீகரிக்கப்பட்டுசிறந்த உயர்பெறுபேறுகளைப் பெறும்பாடசாலையாகச்செயற்பட்டுவருகின்றது. அவ்வாறு செயற்படுவதற்கு பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவிகள் மற்றும் சமய, சமூக நிறுவனங் களின் பிரதிநிதிகளும் உதவியாகவும் அனுசரணையாகவும் இருந்து வருகின்றனர்.

அண்மையில் இந்தக் கல்லூரியில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக எனது கவனத்துக்குத் தெரிவிக்கப்பட்டதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளாக முஸ்லிம் ஆசிரியைகள் மூன்று பேர் இக் கல்லூரியில் சேவைக்காக இணைக்கப் பட்டுத் தமது கடமைகளைச் செய்து வந்த போது அவர்கள் இக்கல்லூரியின் உடை நியதிகளுக்கு அமைவாக சேலை அணிந்தே கல்லூரிக்கு வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் முழுமையாக இக் கல்லூரியின் மரபு,கல்லூரி ஒழுக்க விதி முறைகள் மற்றும் கல்வி விழுமியங்களுக்கு அமைவாக கடந்த நான்கு ஆண்டுகளாக எவ்வித வேறுபாடும் இன்றிச் செயற்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பாக இந்தக் கல்லூரி சமூகம் எத்தகைய எதிர்ப்பையும் வெளிக்காட்டவில்லை.

ஆயினும், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல்ஒரு முஸ்லிம்ஆசிரியை இடமாற்றம்பெற்று வந்தபோது முஸ்லிம் பெண்கள் அணி யும் ஹபாயா உடையில் கல்லூரிக்கு வந்துள் ளார். அவ்வேளையில் கல்லூரி அதிபர் அந்த ஆசிரியைக்கு அந்தக் கல்லூரி ஆசிரியைகளின் உடை தொடர்பான மரபுகளையும், அப் பாடசாலை ஒழுக்க விதிகளையும் எடுத்துக் கூறி ஏனைய ஆசிரியைகளைப் போன்று சேலை அணிந்து வருமாறு ஆலோசனை வழங்கியுள் ளார். அந்த ஆசிரியையும் தனது உடையில் மாற்றம் செய்து சேலை அணிந்து வருவதற்கு சிறிது கால அவகாசம் கோரியிருந்ததால் அதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தகவல் அறியும் சட்டம் தொடர்பான எண்ணக்கரு, பாடப்பரப்பு என்பவற்றை சாதாரண, உயர்தரப் பாடங்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மே 01

தகவல் அறியும் சட்ட மூலம் தொடர்பான எண்ணக்கரு மற்றும் பாடப்பரப்பு என்பவற்றை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு முதல் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய பாடங்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தகவல் அறியும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்கலைக்கழக சமூக விஞ்ஞானம் மற்றும் ஊடகத்துறை ஆகிய பாடங்களிலும், அரச பணியாளர்களின் தடை தாண்டல் பரீட்சைகளிலும் இந்த விடயதானம் உள்ளடக்கப்படவுள்ளது என்றும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக நிருவாகம் மற்றும் கல்வியியல் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் பியதிஸ்ஸ ரணசிங்க மேலும் அறிவித்துள்ளார்.


(க)

## கொலம்தொட்ட வெசாக் வலயம் திறப்பு

கொழும்பு, மே 01

2018 ஆம் ஆண்டுக்கான வெசாக்தினவைபவத்தினை முன்னிட்டு கொழும்பு 'கொலம்தொட்ட வெசாக் வலயம்' மக்களின்பாவனைக்காகதிறந்துவைக்கப்பட்டது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சூர் மஹிந்த சமரசிங்க இந்த வெசாக் வலயத்தை திறந்து வைத்தார்.



## பௌத்தாலோக வெசாக் வலயம் ஜனாதிபதி தலைமையில் திறப்பு



கொழும்பு, மே 01

வெசாக் நோன்மதி தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள விஹாரைகளில் புண்ணிய நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு பௌத்தாலோக வெசாக் வலயமும் அதற்கிணைவாக அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தால் நடத்தப்படும் புனிதப் பொருள் கண்காட்சியும் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அஸ்கிரிகெடிகே ரஜ மஹா விஹாரையில் இருந்து எடுத்து வரப்பட்ட இந்த புனிதப் பொருள் ஜனாதிபதியினால் வைக்கப்பட்டதன் பின்னர் அதற்கான புனித பூஜை இடம் பெற்றது.

அஸ்கிரிகெடிகே ரஜ மஹா விஹாராதிபதி சங்கைக்குரிய கோமாரிகே ராஹூல தேரரின் மத்தியஸ்தத்துடன் இந்த புனித பொருள் கண்காட்சி இடம்பெறுகின்றது.

## ஹட்டன், ருவான்புர குடியிருப்பில் தீ உடைமைகள் எரிந்து நாசம்!

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருவான்புர பகுதியிலுள்ள குடியிருப்பு ஒன்றில் திடீரென தீ பரவியமையால் அந்தக் குடியிருப்புமுற்றாகஎரிந்து நாசமாகியுள்ளது என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தினால் குடியிருப்பு முற்றாக எரிந்துள்ளமையினால் உடைமைகள் அனைத்தும் தீயில் கருகி விட்டன.எனினும் எனிஉயிராபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை என பொலிஸார்தெரிவித்தனர்.

குடியிருப்பில்வாழ்ந்து வந்த 4 பேர் உறவினர்களின் வீட்டில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் மின்சார கோளாறே தீ பரவலுக்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தத்தீவிபத்து



தொடர்பில்மேலதிகவிசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தேனீ வளர்ப்பின் மூலம் கூடுதலான வருமானம்



கொழும்பு, மே 01

தேனீ வளர்ப்பின் மூலம் கூடுதலான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் 20 தேனீ வளர்ப்புக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாகொட பனாமுற பகுதியில் இவை அமைக்கப்பட்டுள்ளன. ஒரு தேனீ வளர்ப்புப் பெட்டிக்கு மாகாண விவசாய அமைச்சு 2 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

தேனீ வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு இலவசப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

## புத்த - ரஷ்மி வெசாக் வலயத்தில் புனிதப் பொருள்கள் பிரதமர் ரணிலால் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன

கொழும்பு, மே. 01

பிரதமர் அலுவலகமும் - கங்காராம விஹாரையும் இணைந்து ஒழுங்கு ஏற்பாடு செய்துள்ள புத்த-ரஷ்மி வெசாக் வலயத்தில் புனிதப் பொருள்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பொறுப்பேற்கப்பட்டு கண்காட்சியில் வைக்கப்பட்டன.

இந்தியாவின் சாராநாத் நகரில் இருந்தும் பாகிஸ்தானின் தக்ஷிலா நகரில் இருந்தும் எடுத்துவரப்பட்ட இந்த புனிதப் பொருள்கள் ஹுணுப்பிட்டிய கங்காராம விஹாரையில் இருந்து நடை பவனியாக அலரிமாளிகைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.



அதன் பின்னர் புனிதப் பொருள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பொறுப்பேற்று கண்காட்சியில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைத்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்



கொழும்பு, மே. 01

அநுராதபுரம்மாவட்டத்தில் சிறுநீரக நோயால் அதிகளவிலானார் பாதிக்கப்பட்டுள்ள கலன்பிந்துனுவெவ, கெபத்திகொல்லாவ – அட்ராவ, முஸ்லிம் எடவீர வெவ ஆகிய பிரதேசங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான குடிதண்ணீர் சுத்திகரிப்புநிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நரகத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமால் இந்த குடிதண்ணீர் திட்டம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

சிறுநீரக நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள வடமத்திய மாகாணத்தில் இவ்வாறான திட்டங்களின் மூலம் சிறுநீரக நோய் ஏற்படுவது மட்டுப்படுத்தப்படும்.

அத்துடன் 'வீட்டுக்கு வீடு மரம்' செயற்றிட்டத்தையும் அந்தப் பிரதேசங்களில் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

## சிவனொளிபாத யாத்திரை காலம் நிறைவு

கொழும்பு, மே 01

2017 , 2018 ஆண்டுகளுக்கான சிவனொளி பாதமலை யாத்திரை காலம் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்தது.

இதற்கமைவாக சிவனொளிபாதமலையில் வைக்கப்பட்டிருந்த புனிதப்பொருள்கள் பௌத்த சம்பிரதாயத்திற்கு அமைவாக பெரஹர ஊர்வலமாக நேற்றுக் காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## கடைகளை வாடகைக்கு வழங்குதல்– 2018

சத்தியக்காட்டு சந்தைச் சதுக்கம் மற்றும் சங்கரத்தைச் சந்தைச் சதுக்கங்களில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக் கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரி நீங்கலாக) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மீளளிக்கமுடியாதகேள்விப்படிவக்கட்டணம் (VAT,NBT வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| சத்தியக்காட்டு சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 02 | 02 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 03 | 03 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| | | | | |
| சங்கரத்தை சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 02 | 02 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 03 | 03 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 04 | 04 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 05 | 05 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |

**கேள்விப் படிவம் வழங்கப்படும் திகதி :- 2018.05.01-2018.05.17 ஆம் திகதிவரை**

**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 2018.05.18 பி.ப.2 மணிவரை**

**கேள்விப் படிவம் திறக்கப்படும் திகதி :- 2018.05.18 பி.ப.2.30 மணிக்கு**

## நிபந்தனைகள்

**1.** அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2018.05.01 ஆம் திகதியில் இருந்து ஒரே முறையில் செலுத்தக் கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப் பிரதிகளில் பெற்று 2018.05.18 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.

**2.** அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமான மாற்றங்களும் செய்தல் ஆகாது.

**3.** படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்களில் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**4.** கேள்விப் படிவங்களைப் பெற்றக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப் பிரதியை தவிசாளர், "வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது தலைமை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். மற்றைய இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலகம் யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**5.** 2018.05.18 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**6.** 2018.05.18 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**7.** ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பித்தல வேண்டும்.

**8.** அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.

**9.** எக் கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

**10.** கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் தான் வதியும் இடத்தின் கிராம அலுவலரிடம் இருந்து வதிவிடச் சான்றிதழ், மற்றும் தேசிய அடையாள அட்டைப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.

**11.** கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப் படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடைமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய்மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**12.** கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக் காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

**13.** ஏற்றக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகையின் 15 % பெறுமதி சேர் வரியாகவும் (VAT) 2 % தேசத்தை கட்டி யெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிகாமம் மேற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

**14.** வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக் களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் 15 % பெறுமதிசேர் வரி(VAT), 2 % தேசத்தைகட்டியெழுப்புதல் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.

**15.** மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப் பணத்தினை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி ரத்துச் செய்யப்படும்.

**16.** முற்குறிப்பிடப்பட்ட 14 ஆவது 15 ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் ரத்துச் செய்யப் பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

**17.** தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

**18.** குத்தகையாளர்தான் நடத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

**19.** வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 5 வருடங்களுக்கு ஒருமுறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்புத் தெரிவிக்க முடியாது.

**20.** குத்தகைக்குப் பெற்ற கடையினர் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் மின்சாரக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

**21.** கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஓர் அறிவித்தலும் இன்றி கடை மீளப் பெறப்படும்.

**22.** கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்துக்குள் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.

★ மிகை இலாபம் ஈட்டிய குற்றம்

★ நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்

★ சந்தை உபவிதிகளை மீறிய குற்றம்

**மேலதிக விவரங்களை அலுவலக நாள்களில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

**திருமதி. த. நடனேந்திரன்,**
*தவிசாளர்,*
*வலிகாமம் மேற்கு பிரதேச சபை,*
*சுழிபுரம்.*
*2018.04.27.*

## இலவச யோகாசன தியான வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே 01

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முன்பாகவுள்ள அளவெட்டி கலாசார மத்திய நிலையத்தில் இலவசமாக யோகாசனதியானவகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை நடைபெற்று வரும் இவ் வகுப்புக்களில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும் என ஆசிரியர் சிவஸ்ரீ தவசுதக்குருக்கள் அறிவித்துள்ளார்.

அத்துடன் பண்ணிசை, மிருதங்கம், வயலின் வகுப்புக்களும் இலவசமாக நடைபெறுகின்றன.

மேலதிக தகவல்களை அளவெட்டி கலாசார மத்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## யோகா, தியானம் சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 01

இந்து சமய கலாசார அலுவல்க் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டு வரும் யோகாசன தியான கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தன் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நல்லூர் ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும்.

இவ்வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தனித்தனிப்பிரிவுகளாக நடத்தப்படும். ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறுதினங்களில் காலை 6.30-7.30 மணிவரையிலும் பெண்களுக்கான பிரிவு அதே தினங்களில் காலை 7.30-8.30 மணி வரையிலும் நடைபெறுவதுடன் நோயாளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

முற்றிலும் இலவசமாக நடைபெறும் இக்கற்கை நெறியில் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும் என இணைந்து பயன்பெற விரும்பும் ஆர்வமுடையோர் தமது பதிவுகளை நல்லூர் ஆறுமுகநாவலர் மண்டபத்தில் கற்கைநெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது முன்போ மேற்கொண்டு இணைந்து கொள்ளமுடியும் மேலதிக விவரங்களை மேற்படி மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தொழிலாளர் உரிமைக்கு குரல் கொடுக்கும் எழுச்சிமிகு நாள்

# மேதினம்

புன்னியாமீன்

இன்று மே தினம். அதாவது ஆண்டுதோறும் மே மாதம் முதலாம் திகதி உலக மெங்கும் உழைக்கும் வர்க்கத்தின், தொழிலாளர்களின் தினமாக கொண்டாடப்படுகின்றது. இன, மத, மொழி, நாடு என்ற யாதொரு வேறுபாடு மின்றி உழைக்கும் வர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்தியை, ஒற்றுமையைப் பறைசாற்றும் தினமாகக் கொண்டாடப் படுகின்றது.

உலக கைத்தொழில் புரட்சியின் பயனாக ஆலைகளின் பெருக்கம், இயந்திர மயமாக்கம், பேரளவு உற்பத்தி ஆகிய காரணிகள் தொழிலாளரை ஒரு வர்க்கமாக ஒன்றுபட வைத்தது. ஒரு புறம் முதலாளிகள் உற்பத்தி முயற்சியில் இலாபம் பெறுகின்றனர். தொழிலாளரிடமிருந்து ஊழியத்தைப் பெறுகின்ற அளவு அவர்களுக்கான உரிமைகள், ஊதியம், சலுகைகள் என்பவற்றை வழங்குவதில் உற்பத்தியாளர் ஆர்வம் காட்ட வில்லை.

கால்வயிற்றுக் கஞ்சிக்காக தம் உழைப்பை நல்கும் தொழிலாளர் வேறு வழியின்றி முதலாளிகள் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டனர். இதனால் தொழிலாளர் வாழ்க்கையை சிறுமையும், வறுமையும் ஆட்கொண்டன. அதே நேரம் தொழில் உரிமையாளர்களால் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய வேண்டுமென தொழிலாளிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்படிப்பட்ட பின்னணியில் கட்டாய வேலைநேரத்திற்கு எதிராக பல்வேறு நாடுகளில் குரல்களும் ஆங்காங்கே எழ ஆரம்பித்தன. குறிப்பாக இங்கிலாந்தில் தோன்றிய ஆவண இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டங்களை நடத்தியது.

இதில் 10 மணிநேரவேலைக்கோரிக்கை முதன்மை பெற்றிருந்தது. 1830களில் பிரான்ஸில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் தினமும் கட்டாயமாக 15 மணிநேரம் உழைக்க வேண்டி இருந்தனர். இதை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

1834ல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற கோஷத்தை முன்வைத்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் இப்போராட்டங்கள் தோல்வியில் முடிவடைந்தன. இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் மெல்போர்னில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் உலகிலேயே முதன் முதலாக 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர். மெல்போர்ன் கட்டடத் தொழிலாளர்களின் போராட்டம் 8 மணிநேர வேலை, 8 மணிநேர பொழுதுபோக்கு, 8 மணிநேர ஓய்வு என்ற அடிப்படையில் அமைந்திருந்தது.

மெல்பேர்ன் தொழிலாளர்களின் வெற்றி தொழிலாளர் வர்க்க போராட்டத்தின் மைல்கல்லாக அமைந்தது எனலாம். சார் மன்னனின் ஆட்சியின் கீழ் ரஷ்யத் தொழிலாளிகள் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்கள். இங்கும் 1895 - 1899 இற்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

1896 ஏப்ரல் மாதத்தில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளிகளின் நிலைமை குறித்து விரிவாக எடுத்துரைத்திருந்ததுடன் ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதார போராட்டம் - அரசியல் போராட்டமாக எழுச்சிக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே 1917- ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் 1832 இல் பொஸ்டன் நகரில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். அதே போல், 1835இல் பிலடெல்பியாவிலும், பென்சில் வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்



வைத்து போராட்டங்கள் நடத்தப்பட்டன.

பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், ரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க முதலாளிகள் ஆரம்பத்தில் இதனைக் கண்டு கொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் 1884 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இவ்வியக்கம் அடிப்படையில் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன் வைத்து தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது. தொழில் நகரங்களான நியூயோர்க், சிக்காகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டி மோர் என அமெரிக்கா முழுவதும் மூன்றரை லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் தொடங்கியது.

இவ்வேலை நிறுத்தத்தில் 1200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர் என கூறப்படுகின்றது. தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்காவின் பெரிய நிறுவனங்கள் மூடப்பட்டன. ரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது.

மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். இந்த எழுச்சி சிக்காகோவிலும் ஏனைய பிரதேசங்களிலும் தொடர்ந்தன. சிக்காகோவில் வேலை நிறுத்தப்போராட்டம் சூடுபிடித்தது. மே 3, 1886 அன்று மெக்கார்மிக் ஹார்வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின் வாயிலில் 3000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டு கண்டனக் கூட்டத்தை நடத்தினர்.

இங்கு இடம்பெற்ற கலவரத்தில் 4 தொழிலாளர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாயினர். இச்சம்பவத்தை கண்டிக்கும் வகையில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று மாபெரும் கண்டன கூட்டம் ஒன்றை தொழிலாளர்கள் நடத்தினர். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்ட கண்டனக் கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது. இந்நேரத்தில் காவல் துறையினர் அனைவரையும் கலைந்து செல்லுமாறு கூறினர்.

இவ்வேளையில் திடீரென்று கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த இடத்திலேயே ஒரு காவல்துறையினர் பலியானார். பின்னர் பொலிஸார் கூட்டத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தித் தொழிலாளரைத் தாக்கினர். இச்சம்பவத்தில் 7 பொலிஸாரும், 4 தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணை ஜுன் 21, 1886 ஆரம்பமாகியது.

இறுதியில் 7 தொழிலாளர் தலைவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிக்காகோ தியாகிகளின் தியாகமும் தான் இன்றைக்கு மே தினமாக - உழைப்பவர் தினமாக நம்முன் நிற்கிறது. 1889 ஜுலை 14 அன்று பாரிஸில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் நாடாளுமன்றம் கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்படப் பலர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாக கண்டித்ததோடு, 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் போராட்டங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது. இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுத்தது.

1890 மே 1 இலிருந்து இன்று வரை ஒவ்வோராண்டும் மே 1ம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. தொழிலாளரின் அவர்களது ஆற்றலின் தேவையை உணர்த்த வேண்டிய, போற்ற வேண்டிய இந்நாள் உண்மையான நோக்கத்திலிருந்து தலைகுப்புறப் புரண்டுவிட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுப்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற இந்நாளானது இன்று உருவாக்கத்தின் நோக்கத்தையே மறந்துவிட்டு ஒரு கேளிக்கை தினமாக மாறி வருவது சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும்.

> ஆனால் இன்றோ கேளிக்கையுடனான அரசியல் மேடைகளாக மாறி வருகிறது இந்தப் புரட்சி நாள்...!

தொழிலாளரின் ஒற்றுமையை உறுதிப்படுத்த சபதமேற்கும் இந்நாள் தொழிலாளரின் உரிமைகள் வெற்றி கொள்ள ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டிய இந்நாள் பல்வேறு பிரிவினைகளுக்கு உரமூட்டும் நாளாக அமைந்துவிட்ட அவலத்தை நாம் மூன்றாம் உலக நாடுகளின் காணக்கூடியதாக உள்ளது. உழைப்பாளரின் சக்தியை, ஒற்றுமையை ஓங்கியொலிக்க வேண்டிய இந்நாள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்ட அவல நிலையையே வெளிப்படுத்துகின்றது.

இத்தினத்தின் நோக்கம் இன்று புறந்தள்ளப்பட்டு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஒவ்வோர் அரசியல் கட்சிகளதும் ஆள்பலத்தை வெளிப்படுத்தும் தேசிய நாளாக அமைந்துவிட்டது என்றால் அதுவே யதார்த்தம். அதுவே உண்மை. பிள்ளையார் பிடிக்க குரங்கானது என்பது போல் தொழிலாளரின் உரிமை பற்றி குரல் கொடுக்க வேண்டிய மேதின ஊர்வலங்களும், கூட்டங்களும் இன்று அரசியல் ஊர்வலங்களாகவும்



அரசியல்மேடைகளாகவும் மாறிவிட்டன.

ஜனநாயக நாடான நமது நாடுகளில் மேதினம் நடத்த, ஊர்வலம் செல்ல, கூட்டத்திற்கு ஆள்திரட்ட பண நாயகமும், மது நாயகமும் உதவும் பரிதாப நிலையும் காணப்படுகின்றது. மேதினத்தின் நோக்கத்தையே, அதன் உண்மைத் தாற்பரியத்தையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு அதன் மேல் நின்று ஒப்பாரி வைப்பது போன்றே இன்றைய காலத்தில் மேதினம் கொண்டாடப்படுகின்றது.

தொழிலாளர் வர்க்கமே ஒன்றுபட உரிமைகளை வென்றெடு, நிலைநாட்டு என்று குரல் எழுப்ப வேண்டிய பெருமதிமிக்க இத்தினத்தில் மூன்றாம் உலக நாடுகளின் நவீன சுரண்டல்கள் பற்றியும், நமது நாடுகளின் தொழிலாளர் நிலைபற்றி சிந்திப்பது காலத்தின் தேவையாகும். ★





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 31

பகுதி - I

**கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக?**

✓ **1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கோலத்தில் A , B இற்குப் பொருத்தமான எண்களை முறையே குறிக்கும் விடையைத் தெரிவு செய்க?**

1.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 10 | 17 | A | 37 | 50 | 65 | B | 101 |

1. 25 உம் 83 உம்
2. 28 உம் 80 உம்
3. 26 உம் 82 உம்

2.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | A | 25 | 36 | 49 | B | 81 | 100 | 121 |

1. 12 உம் 24 உம்
2. 16 உம் 64 உம்
3. 14 உம் 64 உம்

✓ **பின்வரும் எழுத்து அட்டைகளைக் கவனியுங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| A | A | A | B | B |

**A யும் B யும் 10 இலும் குறைந்த இரண்டு வித்தியாசமான இலக்கங்களைக் கொண்டவை இவ் ஐந்து அட்டைகளிலும் உள்ள இலக்கங்களைக் கூட்டும் பொழுது கூட்டுத்தொகை 30 பெறப்படுகின்றது. ஆயின்**

3. **A அட்டை பெறக்கூடிய இலக்கம் எது?**
   1. 8
   2. 4
   3. 9

4. **B அட்டை பெறக்கூடிய இலக்கம் எது?**
   1. 3
   2. 5
   3. 9


✓ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக?**

**எம்மைப் போன்ற சிறுவர்கள்**
**களிப்புடனே கல்வி கற்று**
**ஞானம் பண்புவளரப் பெற்று**
**உழைத்திடுவார் நாட்டினுக்கு**

**எங்கும் எதிலும் ஆசையாய் கற்றல்**
**மங்காத சுகவாழ்வின் ஆதாரம்**
**இவ்வுலகில் இதற்கு நிகர்வேறு**
**எதுவுமில்லை எவர்க்குமே**

5. **"ஞானம் வளரப் பெற்று" என்பதன் பொருள் யாது?**
   1. அறிவும் நற்பழக்கமும் மேம்படுதல்
   2. இல்லாத குணங்களைக் காட்டுதல்
   3. அறிவை விட நற்பழக்க வழக்கங்கள் மேம்படுத்தல்
6. **இவ்வுலகில் எதற்கு நிகர் எதுவுமில்லை?**
   1. ஆசையாகக் கற்றலுக்கு
   2. ஞானமும் பண்புக்கும்
   3. சிறுவர்களுக்கு
7. **2017ஆம் ஆண்டு மாசிமாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின், பங்குனிமாதம் 28 ஆம் திகதி என்ன கிழமை?**
   1. திங்கள் 2. ஞாயிறு 3.செவ்வாய்
8. **வட்ட வடிவ மைதானம் ஒன்றின் சுற்றளவு 24 m ஆகும். 3 m இடைவெளியில் தூண்கள்** நடத்தப்பட்டது எனின் மைதானத்தைச் சுற்றி நட எவ்வளவு தூண்கள் வேண்டும்?
   1. 8 2. 9 3. [illegible]
9. **கீழுள்ள சொற்கூட்டங்களில் பொருத்தமற்ற சொற்கூட்டத்தை தெரிவு செய்து எழுதுக**
   1. பால் - நேநீர்
   2. வரைதல் - ஓவியன்
   3. சிலை - விறகு
10. 1. அன்னம் - அரிசி
    2. அலை – கடல்
    3. நட்சத்திரம் - நிலம்
11. **முதல் 3 ஒற்றை எண்ணினதும் முதல் 3 இரட்டை எண்ணினதும் கூட்டுத்தொகை யாது?**
    1. 21 2. 2[illegible] 3. 32



நல்ல மனிதன் விவாதத்தில் ஈடுபடுவதில்லை. விவாதத்தில் ஈடுபட்டு காலத்தை கழிப்பவன் நல்ல மனிதனாக இருக்க முடியாது



# குருவின் தேவை

ஒரு ஜென் துறவிக்கு நிறைய சீடர்கள் இருந்தனர்.

ஒரு சீடன் திருடும் போது பிடிபட்டுக் கொண்டான். அவனை உடனே வெளியே அனுப்புமாறு மற்ற சீடர்கள் கேட்டுக்கொண்டனர். துறவியோ கண்டுகொள்ளவே இல்லை.

மீண்டும் ஒரு முறை அவன் திருடும் போது பிடிபட்டான். அப்போதும் துறவி அதைக் கண்டு கொள்ளவில்லை.

உடனே மற்ற சீடர்கள் அனைவரும் ஒரு மனு எழுதி அச்சீடனை வெளியே அனுப்பாவிட்டால் தாங்கள் அனைவரும் வெளியேறப்போவதாக எழுதி அனைவரும் கையொப்பமிட்டிருந்தனர்.


அதைப் படித்த துறவி அன்பு கனிந்த குரலில் கீழ்க்கண்டவாறு கூறினாராம்:

சீடர்களே நீங்கள் அனைவரும் எத்துணை புத்திசாலிகள் என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். உங்களால் எது சரி என்றும் எது தவறு என்றும் அறிய முடிகிறதே! நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

ஆனால் அந்தச் சீடருக்கு என்னைத் தவிர வேறு யார் எது சரி என்றும் எது தவறு என்றும் எவ்வாறு தவறுகளில் இருந்து சரியாகப் பயில வேண்டும் என்பதையும் சொல்லித் தருவார்கள்?

அப்போது அந்தச் சீடர் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலவென வழிந்ததுடன் அதன் பிறகு அவர் திருடவேயில்லை.

# நிறம் தீட்டுவோம் வாங்க...!



# 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!


காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : காலைக்கதிர் சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 31, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்.

# வவுனியா நகரசபையில் இடம்பெற்ற ஜனநாயகப் படுகொலை தேர்தல் முறை மாற்றத்தின் அவசியத்தை உணர்த்தியுள்ளது

வவுனியா, மே 01

வவுனியாநகரசபையில் இடம் பெற்ற ஜனநாயகப் படுகொலை தேர்தல் முறையில் மாற்றத்தை கொண்டுவர வேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.



வவுனியா நகரசபையில் தமிழ்தேசியக்கூட்டமைப்புபெரும்பான்மை பெற்றிருந்த போதும் போனஸ் ஆசனங்களை மட்டும் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டனி ஆட்சி அமைத்ததை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் என கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியாநகரசபையில்தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக 8 வட்டாரங்களில் வெற்றி பெற்றிருந்தது. புதிய தேர்தல் முறையின் கீழான போனஸ் ஆசனங்களையே தமிழர் விடுதலைக் கூட்டனி பெற்றிருந்தது.

அதன் சார்பில் ஈ.பி.ஆர்.எல்.

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

எவ். அந்த 3 ஆசனங்களைப் பெற்றிருந்தது. அதனடிப் படையில் வவுனியா நகரசபையில் ஜனநாயக படுகொலை ஒன்று அரங்கேறியுள்ளது.

ஒரு மோசடித்தனமான முறையில் ஆட்சியை கைப்பற்றியிருக்கிறார்கள். கூட்டமைப்பு 8 ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற நிலையில் இன்னொரு கட்சி 7 ஆசனங்களை நேரடியாக பெற்று போட்டியிட்டு அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் அதனை ஜனநாயக முறையாக ஏற்கலாம்.

ஆனால் இங்கு நேரடியாக வெல்லமுடியாத கட்சிகள் அனைத்தையும்ஒருங்கிணைத்து போனஸ் ஆசனங்களைவைத்துக்கொண்டு ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது தவறானது.

இந்த உதாரணம் எதிர்காலத்தில் இந்த தேர்தல் முறையை மாற்றுவதற்கு உதவும் என நான் கருதுகிறேன். அத்துடன் வவுனியா நகரசபையை தமிழ் மக்கள் மட்டும் தான் ஆளவேண்டும் என்று கூறுவதில்உடன்பாடில்லை.

முஸ்லிம் அங்கத்தவர்களுக்கும் இடங்கள் வழங்கப்பட வேண்டும். இயலுமாகவிருந்தால் சிங்கள பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

வவுனியா நகரசபையில் மூன்று இனத்தவர்களும் இருந்து வருகின்றனர். நகரசபைவிவகாரத்தில் தமிழரசுக் கட்சி தலைமைகள் பிழை விட்டுக்கின்றன என நான் கருதுகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சு-100)


# மூதூரில் விபத்து: இருவர் படுகாயம்

கொழும்பு, மே 01

மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூதூர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு வாகனச் சாரதிகளும் படுகாயமுற்ற நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# இலங்கையில் ஏழு நட்சத்திர சொகுசு வீட்டுத்தொகுதி கட்டடம்

கொழும்பு, மே 01

இலங்கையில் ஏழு நட்சத்திர சொகுசு வீட்டுத்தொகுதி கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் சீனாவின் முன்னணி நிறுவனம் ஒன்று கைச்சாத்திட்டுள்ளது. சைனா ஹார்பர் இன்ஜினியரிங் (China Harbor Engineering) நிறுவனமே இலங்கையுடன் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பு 4 இல் 30 கோடி ரூபா முதலீட்டில் இந்த கட்டடத் தொகுதி நிர் மாணிக்கப்படவுள்ளது. 50 மாடிகளைக் கொண்ட இந்த இரட்டைக் கோபுரக் கட்டடம், 584 அலகுகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எம் உரிமைக்காக, - அநீதிக்கு எதிராக தொடர்ந்து ஓங்கி குரல் கொடுப்போம்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மேதினச் செய்தி

இன்று உலக தொழிலாளர் தினம். இன்றைய நாள் தொழிலாளர்களுக்கான புரட்சி நாள். அவர்கள் தங்களின் உரிமைக்காகவும் அநீதிகளுக்கு எதிராகவும் கிளர்தெழுந்த நாள்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினராகி நாமும் உழைப்பாளர்களின் உரிமைக்காகவும் அநீதிக்கு எதிராகவும் தொடர்ந்தும் குரல் கொடுக்கும் அதே சமயம் தமிழர் ஆசிரியர்களுன் உரிமைக்காக ஒற்றுமையுடன் பாடுபடுவோம்; போராடுவோம். - இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத் துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் -

1886 மே முதலாம் திகதியன்று சிக்காகோ நகரம் தனது வரலாற்றில் ஏராளமான தொழிலாளர்கள் தங்கள் கருவிகளை கீழே வைத்துவிட்டு தெருவுக்கு இறங்கி தங்களது மாபெரும் வர்க்க ஒற்றுமையைக் காட்டிய காட்சியைக் கண்டது. சிக்காகோ நகரம் மட்டுமல்ல உலகமே கண்டது. தொழிலாளி வர்க்கத்தின் எதிரிகள் மற்றும் அரசு எந்திரம் இணைந்து தொழிலாளர்களை கைது செய்தது.

போர்க்குணம் மிக்க தலைவர்களை அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கியது. அமைதியான முறையில் போராட்ட களத்தில் நின்ற தொழிலாளர்களை காவல்துறை சுற்றி வளைத்து தாக்கியது. அதில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி பல தொழிலாளர்கள் காவல் துறையின் துப்பாக்கி சூட்டிற்கு தங்களது உயிரையும், குருதியையும் தந்தனர். தொழிற்சங்க தலைவர்கள் பலர் தூக்கு கயிற்றை முத்தமிட்டனர். அவர்களின் அந்த மகத்தானதியாகமே மேதினத்தை தொழிலாளர்களின் உரிமை தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டித்து வருகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு உருவான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உழைப்பாளர்களின் உரிமைக் காகவும், அநீதிகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் குரல்கொடுக்கும் என்பதோடு, தமிழர் ஆசிரியர்களின் உரிமைக் காக ஒற்றுமையுடன் பாடுபடும்; போராடும்- என்றுள்ளது.

(இ

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 20, கோவில் ஒழுங்கை, ஆதன இலக்கம் 56/25 என்ற இலக்கமுடைய ஆதனம் யாழ் மாநகர சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் M.M.சுல்தான் அப்துல் காதர் எனப் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நாவாந்துறை, சேச் லேன் எனும் முகவரியைச் சேர்ந்த பூபாலசிங்கம் கைம்பெண் சிவக்கொழுந்து என்பவர் 1997.05.31 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4825 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில் குறித்த ஆதனம் தனது மாதாவழி முதுசமும் நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுமுடையதென்றும் இற்றைக்குப் பத்து வருடங்களிற்கு மேலாக தாம் ஆட்சியிலிருந்து ஆட்சி புரிந்துப் பெற்றுள்ளேனென்று வெளிப்படுத்தி தனது மகள் முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதனடாப்பு:- யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, நாவாந்துறை இறை நில.பர.5 குழி14.30. இது 1996.12.26 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா தயாரித்த 1615 ஆம் இலக்க படத்தில் 01 தொடக்கம் 10 துண்டுகளாக சுட்டப்பட்டுள்ளது. இதில் 5 ஆம் இலக்கத் துண்டுக்குரிய நில.பர: 00 குளி12.90 இதன் எல்லை.

கிழக்கு- சின்னவி அருமைத்துரைக்கும் சுப்பிரமணியம் பெண் சந்திராவுக்குரிய ஆதனம்.

வடக்கு- குறித்த படத்தில் 4 ஆம் இலக்கத் துண்டு.

மேற்கு- குறித்த படத்தில் 3 ஆம் இலக்கத் துண்டு.

தெற்கு- குறித்த படத்தில் 10 ஆம் இலக்கத் துண்டு.

தற்போது முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில் ஒழுங்கை
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
26.04.2018

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர்
மாநகரசபை ,யாழ்ப்பாணம்.

# பம்பலப்பிட்டி ஸ்ரீவஜிராராம விகாரையில் சமய வழிபாடுகளில் ஜனாதிபதி மைத்திரி!

பம்பலப்பிட்டி ஸ்ரீ வஜிராராம விகாரையில் புனரமைப்பு செய்யப்பட்ட போதனை மண்டபத்திற்கு காலஞ்சென்ற அதிவண. நாரத தேரரின் பெயர் சூட்டப்படும் புண்ணிய நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.



விகாரைக்கு நேற்று முன்தினம் முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி, முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டமையின் பின்னர் அதிவண. தேரரின் பெயர் சூட்டப் பட்ட போதனை மண்டபத்தை விகாரைக்கு கையளித்தார். ஜனாதிபதி இதற்கு முன்னர் தம்மால் வழங்கப் பட்டிருந்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில்புதியபோதனை மண்டபத்தை விகாரைக்கு வழங்கினார் அதனைத் தொடர்ந்து-, விகாராதிபதி அமரபுர ஸ்ரீ தர்ம ரக்ஷித மகா நிக்காயவின் மகா நாயக்கர் அதிவண. திருக்குணாமலேயே ஆனந்த நாயக்க தேரரின் தர்ம போதனையையும் செவிமடுத்தார்.

## முஸ்லிம் ஆசிரியைகள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்வாறு இருந்தவேளையில், இந்தமாதம் 22ஆம் திகதி, ஏற்கெனவே சேலை அணிந்து கல்லூரிக்கு வந்து கொண்டிருந்த மூன்று முஸ்லிம் ஆசிரியைகளும் கணவர்மாருடன் கல்லூரிக்கு வந்து தாமும் இனிமேல் அபாயா அணிந்து வரப்போகிறோம் எனவும், அது தமது உரிமை என்ற ரீதியிலும் அச்சுறுத்தும் பாணியில் அதிபருக்குத் தெரிவித்துவிட்டு அடுத்தநாள் ஹபாயா உடை அணிந்து வந்துள்ளனர். இதனைக் கண்ணுற்ற மாணவிகளும் பெற்றோர்களும் பழைய மாணவிகளும் மற்றும் பாடசாலையின் நலன்விரும்பிகளும் முஸ்லிம் ஆசிரியைகளின் இந்தத் திடீரென ஏற்பட்ட உடைமாற்றம் தொடர்பாக தமது ஆட்சேபனையைத் தெரிவித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்டஅமைதியின்மையைத் தொடர்ந்து மேலதிகக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச ஒரு தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிகின்றேன்.

**2400 மாணவிகள் கல்விபயிலும் இக்கல்லூரியில் கிட்டத்தட்ட 120 க்கு மேற்பட்ட முஸ்லிம் மாணவிகளும் 110 கத்தோலிக்க, கிறிஸ்தவ மாணவிகளும் இப்போது கல்வி பயில்கின்றனர்.**

இது ஒரு தேசிய பாடசாலையாக உள்ளமையால் இங்கு எந்த இனத்தை அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களும் கல்வி கற்கவும் கல்வி போதிக்கவும் எத்தகைய தடையும் இல்லை. ஆயினும், கல்லூரியில் பேணப்பட்டு வந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகள், கலாசார மரபுகள், மாணவிகள், ஆசிரியைகள் அணிகின்ற உடை தொடர்பான ஒழுங்குமுறைகள் அவ்வாறே பேணப்பட வேண்டு என்பது இந்தக் கல்லூரி சமூகத்தின் விருப்பமாகும்.

முஸ்லிம் ஆசிரியைகள் ஏற்கெனவே இந்தக் கல்லூரிக்குச் சேலை அணிந்து, தங்களது பாரம்பரியமான முக்காடு (பர்தா) அணிந்து வந்து சேவையாற்றியது போல மேலும் தொடர்வஷ்த இக்கல்லூரி சமூகம் எவ்விதத்திலும் ஆட்சேபிக்கமாட்டாது. அதுபோல இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகள் கல்லூரிக்கு வெளியேதாம் விரும்பியவாறு உடை அணிந்து கொள்வதும் அவர்களது விருப்பமாகும்.

ஆயினும், அவர்கள் கல்லூரிக்கு வருகின்ற போது மட்டும் ஆசிரியைகளுக்கான உடை பற்றிய தேசியக் கொள்கைகளின் அடிப்படையிலும் இக்கல்லூரி ஆசிரியைகளுக்கான உடைஒழுங்குவிதிகள் அடிப்படையிலும் செயற்படுவதே இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக அமையும் என நான் நினைக்கின்றேன். இவ்விடயத்தில் எதிர் எதிரான இன, மத ரீதியான ஆர்ப்பாட்டங்களைச் சமய சார்பு அமைப்புக்கள் செய்வது விரும்பத்தக்கதல்ல என்பதே எனது நிலைப்பாடு.

இனங்களுக்குரிய கலாசார உடைகளில் அண்மைக் காலங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவது தவிர்க்க முடியாதவை. இலங்கையில் முஸ்லிம் பெண்கள் ஹபாயா அணிவதும் அவ்வாறான அண்மைக்கால ஒரு மாற்றமாகும். இத்தகைய மாற்றங்கள் எல்லாச் சமூகங்களுக்கும் எல்லா இனங்களுக்கும் பொதுவானதும் அவர்களுக்குரிய உரிமையுமாகும். இவ்வாறு ஆடைக் கலாசாரத்தில் அதிக மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்னமும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் ஏனைய மதப் பாடசாலைகளில் போதிக்கும் முஸ்லிம் ஆசிரியைகளும் சேலை அணிவதே தற்போதும் நடைமுறையில் உள்ளது.

அதுபோல விசேட சந்தர்ப்பங்களில் அல்லது இடங்களில், உதாரணமாக பாடசாலைகள், புனிதத்தலங்கள், மத வழிபாட்டிடங்கள் மற்றும் சில அலுவலகங்களில் உடை தொடர்பான கட்டுப்பாடுகள் பேணப்படுவது அந்தந்த நிறுவனங்களுக்குரிய தனித்துவமாகும். அதில் மாற்றங்களைச் செய்ய முனைந்தால் சமூகத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றமையைத் தவிர்க்க முடியாது போகும்.

நீங்கள் குறிப்பிட்டது போல கடந்த காலங்களில் எமது இரு சமூகங்களுக்கு இடையிலான சிற்சில பிரச்சினைகளைப் பூதாகரமாக்கி பிளவுகளை ஏற்படுத்த அவற்றில் குளிர்காய் பல்வேறு தீயசக்திகள் செயற்பட்டு வந்துள்ளன என்பதை நானும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். அத்தகைய தீய செயற்பாடுகளுக்கு நீங்களோ, நானோ முக்கியத்துவம் அளிக்கக் கூடாதென்பதே எனது விரும்பம்.

எனவே, இந்தச் சிறுபிரச்சினையைப் பெரிதுபடுத்தி மேலும் வளரவிடக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு. ஆகவே, இந்தப் பிரச்சினையை சம்பந்தப்பட்ட அமைச்சும், கல்வித் திணைக்களமும் அந்தக் கல்லூரிச் சமூகமும் அக்கல்லூரியின் பெற்றோரும் பழைய மாணவிகளும் சேர்ந்து கட்டுப்பாடான ஒழுங்குமுறையில் பேசி, கல்லூரியில் பின்பற்றப்பட்டு வந்த உடை மரபுகளுக்கு மதிப்பளித்து, எந்தச் சமூகமாயினும் புதிய உடை கலாசாரத்தை அறிமுகம் செய்யாமல், இதுவரைகாலமும் இருந்து வந்ததுபோல தொடர்வதே பொருத்தமாக அமையும் என்பது எனது அபிப்பிராயமாகும். அதற்காக தங்களின் ஒத்துழைப்பையும் தங்களது சமூகத்தினது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன். என்றுள்ளது. (இ

# ஏமனில் சவூதி வான்வழித் தாக்கு: தீவிரவாதிகள் 50 பேர் உயிரிழப்பு



ஏமனில் சவுதி அரேபியா நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹவுத்தி தீவிரவாதிகள் 50 பேர் பலியாகியுள்ளனர்.

இதுகுறித்து அல் எல்பர்யா வெளியிட்ட செய்தியில்-

ஏமன் தலைநகர் சனாவில் ஹவுத்தி தீவிரவாதிகளுக்கு எதிராக சவூதி கூட்டுப் படைகள் கடந்த வெள்ளிக்கிழமை வான்வழித் தாக்குதல் நடத்தின. இதில் ஹவுத்தி படையை சேர்ந்த 50 பேர் பலியாகினர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹவுத்தி தீவிரவாத அமைப்புகளும் சவுதியின் இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளன.

ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவூதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

ஏமனில் சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து தாக்குதல் நடத்திவருவதுகுறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானில் தொடர் குண்டுவெடிப்பு; உயிரிழப்பு எண்ணிக்கை 21 ஆக உயர்வு!



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகே ஷாஸ்தரக் பகுதியில் உள்ள எண்டிஎஸ் உளவுத்துறை நிறுவனம் அருகே நேற்றுக் காலை மோட்டர் சைக்கிளில் வந்த தற்கொலைப்படையினர் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, அந்தப் பகுதியில் பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களுக்கு உதவி செய்யும் பணியில் அனைவரும் ஈடுபட்டிருந்த நிலையில், அடுத்த குண்டு வெடித்தது.

இந்த தாக்குதலில் பத்திரிகையாளர் ஒருவர் பலியானார். மேலும் 2 பொலிஸார் உட்பட 27க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஒரே இடத்தில் நடத்தப்பட்ட தொடர் தாக்குதலால் அந்தப் பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

அசாதாரண சூழ்நிலையை மாற்ற பொலிஸார் முயற்சி செய்து வருகின்றனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடகொரியாவின் தலைவருடனான சந்திப்பு குறித்து ட்ரம்ப் அறிவிப்பு



வடகொரியா தலைவருடன் 4 வாரங்களில் சந்திப்பு நடத்தப்படவுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சர்வதேசநாடுகளை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டு வந்தது.

இதனால் அமெரிக்கா உட்பட பல நாடுகள் வடகொரியா மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தது. இந்த நிலையில் 65 ஆண்டுகள் நிலவிய பகையை மறந்து வட, தென்கொரிய ஜனாதிபதிகள் அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்த பேச்சின் முக்கிய அம்சமே கொரிய பிராந்தியத்தில் அணு ஆயுத சோதனைகளை கைவிடுவது என்பதுதான்.

கிம் ஜாங் உன் - மூன் ஜே இன் பேச்சு வெற்றிகரமாக முடிந்துள்ள நிலையில், எதிர்வரும் மே மாதம் பொதுமக்கள் மற்றும் சர்வதேசநிபுணர்கள் முன்னிலையில் அணு சோதனை கூடங்களை வட கொரியா மூடும் என தென் கொரிய ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தென் கொரியா ஜனாதிபதியுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு மேற்கொண்ட ட்ரம்ப், வடகொரியா ஜனாதிபதியுடன் பேச்சு மேற்கொள்வதற்காக நாள் மற்றும் நேரம் 4 வாரங்களில் அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஆஸியில் பீதியை ஏற்படுத்திய 'துரியன்' பழம்!


ஆஸ்திரேலியா பல்கலைக்கழகத்தில் அழுகிய பழத்தில் இருந்து வெளியேறிய துர்நாற்றத்தை எரிவாயு கசிவு என நினைத்து அஞ்சி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வெளியேறியுள்ளனர்.

ஆஸ்திரேலியா மெல்பேர்னில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென துர்நாற்றம் எழுந்துள்ளது.

இதனை எரிவாயு கசிவு என அஞ்சிய பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை வெளியேற்றியுள்ளதுடன், தீயணைப்பு படையினருக்கும் அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் துர்நாற்றம் குறித்த தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

தேடுதலில் தொழில்நுட்ப நிறுவன நூலகத்தில் மறைவிடத்தில இருந்த துரியன் பழங்களே துர்நாற்றத்துக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.



# 'நியூட்ரினோ' திட்டத்தைக் கைவிடக் கோரி தினகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 01

நியூட்ரினோ திட்டத்தை கைவிட வலியுறுத்தி தேனியில் எதிர்வரும் 06 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது என அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தெரிவித்துள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் தேவாரம் பகுதி பொட்டிபுரம் கிராமத்தில் நியூட்ரினோ ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சு அனுமதி வழங்கியிருப்பது மேற்கு தொடர்ச்சி மலையை நாசமாக்கும் சதி என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணைக்கும், மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள சுற்று வட்டார நீர் ஆதாரத்திற்கும், இயற்கை சூழலுக்கும், தேனி மாவட்டத்தின் விவசாயத்திற்கும் மிகப் பெரிய ஆபத்தை இந்த திட்டம் ஏற்படுத்தும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



இதற்கமைய, எதிர்வரும் 06ஆம் திகதி அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேனி மாவட்டம் பொட்டிபுரம் ஊராட்சி, டி.புதுக்கோட்டை கிராமத்தில் மாலை 4 மணியளவில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் கண்டன பேருரை நிகழ்த்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புயல், மின்னல் தாக்கி பீகாரில் 11 பேர் சாவு

டில்லி, மே 01

பீகாரில் புயல் மற்றும் மின்னல் தாக்கியதில் இரு சிறுமிகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள புயல் தாக்கத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

புயல் மற்றும் மின்னல் தாக்குதலால் பல இடங்களில் மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் வீதியில் சாய்ந்து கிடக்கின்றன. இந்த கடுமையான புயல் தாக்குதலால் இரு சிறுமிகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலரும் காயமடைந்துள்ளனர் எனவும் பீகார் மாநில அரசு தெரிவித்துள்ளது.

பாட்னாவில் இருந்து 173 கிமீ தொலைவில் உள்ள மதுபானி மாவட்டத்தில் 10 வயதுச் சிறுமி இடி தாக்கியதிலும், தர்பாங்கா மாவட்டத்தில் நேற்று அதிகாலை மற்றொரு 10 வயதுச் சிறுமி மின்னல் தாக்கியதிலும் உயிரிழந்துள்ளார்.

அதேபோல மதுபாணியில் சதுர்ரா கிராமத்தில் 45 வயதுள்ள ஒருவரும் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இந்நிலையில் பீகார் மாநில முதல்வர் நிதிஷ் குமார், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்ததோடு, அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு தொகை வழங்கப்படும் என அறிவித்தார்.

மேலும் புயல் மற்றும் மின்னல் தாக்கியதில் காயமடைந்தவர்களை கவனிக்க சிறப்பு மருத்துவ குழு ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களுக்கு தேவையான மருத்துவ பராமரிப்பு வழங்கவும் உத்தர விட்டுள்ளார்.

(ஐ)

# பொதுமக்களுக்கு வருமான வரித்துறை எச்சரிக்கை

புதுடில்லி, ம 01

சமூக வலைதளங்களில் பரவும் பணி நியமனம் குறித்த தகவல்களை நம்பி ஏமாற வேண்டாம் என பொதுமக்களை வருமான வரித்துறை எச்சரித்துள்ளது.

சென்னையில் உள்ள வருமான வரித்துறையில் பல்வேறு பதவிகளுக்கு இணையதளத்தின் வழியாக பணி நியமன விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம் என வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் தகவல் பரவியது.

இந்நிலையில் www.incometaxindia.gov.in என்ற அதிகார பூர்வ இணைய தளம் மூலம், இத்தகைய பணி நியமன நடைமுறை எதையும் மேற்கொள்ளவில்லை என வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின் பற்றாக்குறை காணப்படுகிறது

தமிழகத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின்பற்றாக் குறை காணப்படுகிறது என தமிழ் நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் அதன் மாநில தலைவர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் தலைமையில் சென்னையில் கடந்த 2 நாள்களாக நடைபெற்றது.

கூட்ட முடிவில் மாநில தலைவர் எஸ்.எஸ். சுப் பிரமணியன் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

கோடைவெயில் அதிகரித்துள்ள நிலையில் மின்துறை அமைச்சர் தேவையான மின்சாரம் இருப்பதாக தெரிவிப்பது உண்மையல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய மின்தேவையில் 2 ஆயிரம் மெகாவாட் மின்பற்றாக்குறை இருக்கிறது.

இதை நிவர்த்தி செய்வதற்காக முன்னறிவிப்பில்லாத மின்வெட்டு ஆங்காங்கே ஏற்படுவதாகவும், இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், அனல் மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்து, குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வலியுறுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதி 4 அனல்மின் நிலையங்களிலும் குடும்பத்துடன், உண்ணாவிரதம் இருப்பது எனவும், தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் ஜுன் மாதம் 27ஆம் திகதி உள்ளிருப்பு வேலைநிறுத்தம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் மின்விநியோக பிரிவு ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய 380 ரூபா சம்பளத்தை வழங்க வலியுறுத்தி நீதிமன்றம் செல்லவும், ஜுன் மாதத்தில் போராட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சார பொதுத் துறையை பாதுகாக்க வலியுறுத்தி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நாடு முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டு ராணுவ பயிற்சியில் இந்தியா - பாக். பங்கேற்பு



டில்லி, மே 01

ரஷ்யாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பயங்கரவாதத்துக்கு எதிராக பல்வேறு நாடுகள் பங்கேற்கும் கூட்டுப் பயிற்சியில் இந்தியாவும், பாகிஸ்தானும் பங்கேற்க உள்ளன.

இந்த கூட்டுப் பயிற்சியில் சீனா உட்பட 8 நாடுகள் பங்கேற்க உள்ளன.

இதுகுறித்து இந்திய அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தவை வருமாறு:-

இந்த கூட்டுப் பயிற்சி சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கீழ் நடைபெறுகிறது. பயிற்சி ரஷ்யாவிலுள்ள உரல் மலைப் பகுதியில் செப்ரெம்பர் தொடங் குகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான எட்டு(இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான்) நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த அமைப்பின் நோக்கமாகும் என்று கூறியுள்ளனர்.

இதனை கடந்த வாரம் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனும் உறுதி செய்தார்.

மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்கு பிறகு இந்தியா - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற் பட்டது. கடந்த 10 வருடங்களாக பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் சரியான நிலைப் பாட்டை எடுக்க தவறியதால் இரு நாடுகளுக்கும் இடையேயும் எந்த வித ஆரோக்கியமான பேச்சுக் களும் நடைபெறாமல் இருந் தன.

இந்த நிலையில், இரு நாடுகளும் தீவிரவாதத்துக்கு எதிரான பயிற்சியில் பங்கேற்க இருப்பது சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

சுதந்திரத்துக்கு பின்னர் இந்தியாவும், பாகிஸ்தானும் கூட்டு ராணுவப் பயிற்சியில் பிற நாடுகளுடன் கலந்து கொள்வது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# என் கதை முடிந்துவிட்டது என்று நான் நினைத்தேன்; விபத்தில் சிக்க இருந்தமை குறித்து ராகுல் விளக்கம்

புதுடில்லி, மே 01

நடுவானில் விமானம் விபத்தில் சிக்கிய அனுபவம் குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநில தேர்தல் பிரசாரத்துக்காகக் கடந்த வியாழக்கிழமை மாலை பால் கான்-2000 என்ற விமானத்தில் டில்லியில் இருந்து ஹூப்ளி நகருக்கு ராகுல் காந்தி, அவரின் உதவியாளர் உள்ளிட்ட சில காங்கிரஸ் தலைவர்கள் சென்றனர்.

ஆனால், விமானம் நடுவானில் 8 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது, திடீரென இரு முறை குலுங்கி, விமானியின் கட்டுப்பாட்டை இழந்து கீழ் நோக்கி வந்தது.

அதன்பின், மீண்டும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு 3 முயற்சிகளுக்குப் பின் விமானம் தரையிறக்கப்பட்டது.

அதன்பின் இந்த விமானத்தில் ஏதேனும் கோளாறுகள் இருந்தனவா, அல்லது சதிச் செயலா என்பது குறித்து விசாரணை நடத்த கர்நாடக மாநில பொலிஸ் ஆணையாளரிடம் காங்கிரஸ் கட்சி சார்பிலும், ராகுல் காந்தியின் சார்பிலும் புகார்கள் அளிக்கப்பட்டன.



இந்தச்சம்பவத்தில் தனக்கு நேர்ந்த அனுபவம் குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி டில்லியில் நேற்றுமுன் தினம் நடந்த கூட்டத்தில் பேசினார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

''கர்நாடக தேர்தல் பிரச்சாரத்துக்காக நான் டில்லியில் இருந்து ஹூப்ளிக்கு தனி விமானத்தில் கடந்த வியாழக்கிழமை சென்றேன். விமானம் நடுவானில் 8 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. அப்போது, திடீரென விமானம் குலுங்கி, கீழ் நோக்கி இறங்கியது.

அப்போதே என் கதை முடிந்துவிட்டது என்றே நினைத்தேன். ஆனால், என் மனதில் திடீரென ஒரு சிந்தனை தோன்றியது. மானசரோவரில் உள்ள கைலாஷ் மலைக்குப் போய் தரிசனம் செய்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். கர்நாடகத் தேர்தல் முடிந்தபின் 10 முதல் 15 நாள்களுக்குப் பின் இந்தப் பயணத்தை தொடர வேண்டும் என்று முடிவு செய்தேன்.

கர்நாடகத் தேர்தல் முடிந்த பின் ஜூன் அல்லது செப்ரெம்பர் மாதங்களில் கைலாஷ் மலைக்குச் செல்லவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலி சுமந்த மக்களின் உணர்வுகளை மதித்து, அங்கிங்கென்று பிரிந்து நடக்கும் நிகழ்வுகளைத் தவிர்த்து, ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வையும், ஒருங்கிணைந்த மக்கள் திரட்சியையும் வெளிக்கொணர்தலே எமது நோக்கமாகும் என்றும் அது கூறியுள்ளது.

இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நவீன யுகத்தில் நிகழ்ந்த மிகப்பெரும் மனிதப் பேரவலத்தின் உச்சக்கட்டமான முள்ளிவாய்க்கால் பேரழிவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். மே – 18 என்பது தனியே முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ்ந்த பெருந்துயருக்குரிய நினைவுநாள் என்பதையும் தாண்டி, ஈழத்தமிழினம் எதிர்கொண்ட அனைத்து இனவழிப்பையும் ஒருசேர நினைவு கொள்ளும் ஒருநாளாக – தமிழர் இனவழிப்பு நினைவு நாளாக – அமையப்பெற்றிருக்கின்றது.

ஈழத்தமிழினம் தனகு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவற்றின் விளைவான துயர்களையும் நினைவு கொண்டு, உலகிடம் நீதிவேண்டி வீறுகொண்டு போராடத் திடசங்கற்பம் பூணும் ஒரு நாளாக இந்நாள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

எனவே இந்த மே - 18 நாளை எமது தமிழினம் எவ்வாறு கையாள்கிறது என்பது உலக அரங்கில் உன்னிப்பாய்க் கவனிக்கப்படுவதோடு தமிழர்களாகிய எமக்கும் எமது பலத் திரட்சியை வெளிப்படுத்தும் ஒரு களமாகவும் அமைகின்றது.

கடந்த காலத்தைப் போலன்றி இவ்வாண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்படும் நினைவு நிகழ்வானது தமிழரின் உணர்வையும், ஒற்றுமையையும், நீதிக்கான ஒருமித்த வேட்கையையும் தெளிவாக வெளிப்படுத்தும் விதமாக அமையவேண்டுமென்ற அவாவோடு பல்கலைக்கழக மாணவர் சமூகமாகிய நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஒற்றுமை என்றபேரில் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நீர்த்துப் போகச் செய்யும் நோக்கமோ, தமிழர்க்கான நீதி வேண்டிய பயணத்தில் முட்டுக் கட்டைகளாக இருப்போரை அரவணைக்கும் நோக்கமோ, தனிப்பட்ட கட்சிகளுக்கோ அரசியற் பிரமுகர்களுக்கோ மேடையமைத்துக் கொடுத்து சிலருக்கு அரசியல் இலாபம் தேடிக் கொடுக்கும் நோக்கமோ எமது 'ஒன்றுபட்ட நிகழ்வுக்கான அழைப்பின்' பின்னால் இல்லை. மாறாக, வலி சுமந்த மக்களின் உணர்வுகளை மதித்து, அங்கிங்கென்று பிரிந்து நடக்கும் நிகழ்வுகளைத் தவிர்த்து, ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வையும், ஒருங்கிணைந்த மக்கள் திரட்சியையும் வெளிக்கொணர்தலே எமது நோக்கமாகும்.

வலி சுமந்த மக்களை முன்னிறுத்தியதாகவே இந்த ஒன்றிணைந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கான ஏற்பாட்டை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அம்மக்களின் முன்னால் தோன்றி இந்த நிகழ்வில் பங்கேற்க தனக்குத் தகுதியிருப்பதாக மனசாட்சியுடன் சிந்திக்கும் அரசியல்வாதிகள் தாமாகவே முன்வந்து கலந்து கொள்வார்கள், மற்றவர்கள் தாமாக விலகியிருப்பார்கள் என நாம் நம்புகின்றோம். யார், யார் கலந்துகொள்ள அருகதையுள்ளவர்கள் என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

ஆண்டாண்டு காலமாகப் பொய்களையும் புரட்டுக்களையும் மக்களுக்குக் கூறி அரசியல் செய்தோர், இனவழிப்புப் போரில் எதிரியின் பக்கம் நின்றோர், நீதிக்கான தமிழரின் பயணத்தை நீர்த்துப்போக வைக்க முயன்றோர், தகா உறவுகளை அரசியற் கூட்டாக்கி வைத்திருப்போர் எல்லோரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முன்பு தம்மைச் சுயபரிசோதனை செய்துகொள்ளட்டும். உளத் தூய்மையுடன் மக்கள் நலன் சார்ந்தும் இன விடுதலை சார்ந்தும் உழைப்போர் அனைவரும் இந்த ஒன்று திரண்ட நிகழ்வுக்கான அழைப்பையேற்று அணி திரளுங்கள்.!

உலக அரங்கில் பல்வேறு வழிகளில் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது இனம் தனக்கு மறுக்கப்பட்ட நீதியைப் பெறும் போராட்டத்துக்கான அணிதிரள்வையும் புத்தூக்கத்தையும் பெற்றுக் கொள்ளும் ஒரு நாளாக இந்த மே - 18 நாளை மாற்றுவோம். உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்த நினைவு நாளில் ஒற்றுமையாக அணி திரண்டு எமது வேட்கையை உலகுக்குணர்த்துவோம்.

உலகம் முழுவதும் நடைபெறும் மே-18 நிகழ்வுகளுக்கெல்லாம் சிகரமாய்த் திகழும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடக்கும் நினைவுநிகழ்வைச் சிறப்புற நடத்த மக்களினதும், இனவிடிவிற்காய் உழைக்கும் சகலரினதும் ஒத்துழைப்பையும் தமிழ்மக்களின் உரிமைக் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் வேண்டி நிற்கின்றது.

உங்களின் பசியைத் தீர்த்து வைக்காமல் எங்களின் உணவைத் தொடமாட்டோம் என்று மக்களைப் பார்த்து கூறும் உளத்தூய்மையும் உங்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்ற உயிரையும் பிழிந்து கொடுப்போம் என்று மக்களைப் பார்த்து கூறும் நெஞ்சுரமும் உங்களிடம் இருப்பதாக எவரெல்லாம் மானசீகமாக உணர்கிறீர்களோ அவரெல்லாம் மறுக்கப்படும் நீதிக்காகவும் ஏமாற்றப்படும் தமிழ் சமூகத்திற்காகவும் முள்ளி வாய்க்கால் பேரவலத்தினை நினைவு கூர அணி திரளுங்கள். - என்றுள்ளது.(ஐ-7)

## ஆட்சியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார்.

புதிய ஆட்சியை அமைப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ அணியில் இருக்கும் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவும் பேச்சு நடத்தப்படவுள்ளது. அவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறாத பட்சத்தில் வெளியில் இருந்து ஆதரவை வழங்க முடியும் என்றும் அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஆட்சி அமையத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் பிரதமராக யாரை நியமிப்பது என்பன பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமும் ஆலோசனை நடத்தவுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார் என அந்தக் கொழும்பு ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## சிவசக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியின் சில பகுதிகளின் உள்ளூராட்சிச் சபைகளில் வேறு கட்சிகள் ஆட்சி அமைந்திருக்கின்றன. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் நடைபெற்ற தேர்தல் முறை வித்தியாசமான பல பாதிப்புக்களை ஏற்படுத்திய முறையாக உள்ளது. இருந்தாலும் நாம் ஓர் அரசியல் கட்சியாக இருந்தவர்கள். பல்வேறு காரணங்களால் பிரிந்து சென்றமையால் வவுனியா உட்பட வடக்கு மாகாணத்தில் தேசியக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலை வந்திருக்கிறது.

வவுனியாவில் தேர்தல் முறையால் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை வவுனியாவில் 4 சபைகளிலும் மிகக்கூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். உதாரணமாக வவுனியா நகர சபையில் 10 இல் 7வட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று 8 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. வவுனியா தெற்குப் பிரதேச சபையும் அதே போன்றுதான். 13 வட்டாரங்களில் 11 வட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

யுத்த காலத்திலும், யுத்தத்தின் பின்னரும் மஹிந்தவின் காலப்பகுதியிலேயே பெருந்தொகையான சிங்கள மக்களை கொண்டு வந்து வவுனியா வடக்கில் குடியேற்றினார்கள். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு மக்களில்லாத பகுதிகளுக்கு யானை வேலிகள் அமைத்துக் குடியேற்றுவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றன. வந்து குடியேறியவர்களின் கையில் வவுனியா வடக்கின் ஆட்சி போக வேண்டிய நிலை இருந்தது. தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 8 வட்டாரங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு வட்டாரத்திலும் வெற்றி பெற்றன. எமக்குள்ளே என்னதான் பிரிவு இருந்தாலும் தமிழ் பேசுகின்றவர்கள் என்ற வகையிலும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றவர்கள் என்ற வகையிலும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கலாம் என்ற வேலைத் திட்டத்தை நாங்கள் முன்னெடுத்தோம். குறிப்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்றும் சேர்ந்து ஆட்சியமைக்கவேண்டிய தேவை காணப்பட்டது. சிவசக்தி ஆனந்தனுடன் பல தடவைகள் பேசியிருந்தோம். கடைசிவரை ஒத்துப்போக முடியாதென்று கூறிவிட்டார். அவர்கள் ஆம் என்றிருந்தால் 4 சபைகளும் எம்மிடம் இருந்திருக்கும். - என்றார். (ஐ-100)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் இடம்பெறும். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆசிரியைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் கொக்குவில் மூன்றாம் கண்டம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்து வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல், ஆசிரியையின் கூந்தலைப் பிடித்து வெட்டிக் கொடுமைப்படுத்தியதுடன், அவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியது.

அதனைத் தடுக்கச் சென்ற ஆசிரியையின் தாயாரையும் கும்பல் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

இருவரும் அயலவர்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நடன ஆசிரியை கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தருமபுரம் பாடசாலையில் பணியாற்றுகிறார். பாடசாலை விடுமுறை நாளான நேற்று வாள் வெட்டுக் கும்பல் பட்டப்பகலில் வீடு புகுந்து இந்த அட்டூழியத்தைச் செய்துள்ளது. (ஐ-7)

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

2009 ஆண்டு இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ன்றிணைந்து இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், முள்ளிவாய்க்கால் மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-7)

## பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக 10 சதவீதக் கட்டண அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் எனத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

எரிபொருள்களின் விலைச் சூத்திரம் தயாரிப்பு இந்த வாரம் முடிவுறுத்தப் பட்டு அமைச்சரவையின் அனுமதி பெறப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் தெரி வித்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நாளாந்தம் ஏற்படும் நிதி இழப்புக்கு மேலாக எரிபொருள்களின் விலை அதிகரிப்பு விடயம் விரைந்துதீர்வுகாணப்படவேண்டிய பொது விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் டீசல் விலை அதிகரிப்பு ஏற்படவுள்ள நிலையிலும் ரூபாவின் பெறுமதி அமெரிக்கடொலருக்கு எதிராகவீழ்ச்சிகண்டுள்ளதாலும் தனியார் பஸ் கட்டணங்களை 10 சத வீதத்தால் அதிகரிக்க அனுமதியளிக்கவேண்டும் என அரசிடம் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## இனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாதையில் பயணிக்கும் எமக்கு, வரலாறு கற்றுத்தந்த பாடங்களையே இந்த மே தினம் நினைவூட்டுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேதினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்..

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

மனித நாகரிகமானது, இயற்கையின் சவால்களைக் கண்டு அஞ்சாத மனித உழைப்பினாலேயே உருவாக்கப்பட்டது. ஒரு சிறு பிரிவினர் அல்லது வகுப்பினரின் பிடிக்குள் சிக்கியிருந்த மனித நாகரீகத்தின் அந்த மகத்தான படைப்புக்கள், சுதந்திரத்திற்கான தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள் பலத்தினாலேயே பொது மனித உரிமைகளாக மாற்றம் பெற்றன.

இன்று நாம் அனுபவிக்கும் இந்தச் சுதந்திர வாழ்க்கையானது, அந்த உன்னத மனிதர்களின் குருதியினாலேயே உருவானது என்பதை நாம் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே சர்வதேசத் தொழிலாளர் தினம் எமக்கு வலியுறுத்துகின்றது.

மூன்று தசாப்த கால இனப் பிரச்சினையிலிருந்தும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தான்தோன்றித்தனமான ஆட்சியிலிருந்தும் விடுதலைப் பெற்று பலமானதொரு ஜனநாயக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாதையில் பயணிக்கும் நாம் மறந்துவிடக் கூடாத வகையில் வரலாறு நமக்குக் கற்றுத்தந்த பாடங்களையே இந்த மே தினம் எமக்கு மீண்டும் நினைவூட்டுகின்றது.

இலங்கை, உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகள் தொடர்பில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் உடன்படிக்கைகளுடனும் கோட்பாடுகளுடனும் இணங்கிச்செயற்படும் ஒரு நாடாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல், தனியார் துறையினரின் அடிப்படைச் சம்பள எல்லையைச் சட்ட ரீதியாக உறுதி செய்தல், வீட்டுத் தொழிலாளர்களைத் தொழிற் சட்டத்தின் கீழ் கொண்டுவருதல் மற்றும் பிரசவ விடுமுறை தொடர்பில் நிலவிவரும் வேறுபாடுகளை இல்லாது செய்தல் போன்ற விடயங்களில் அத்தகைய சர்வதேச உடன்படிக்கைகளுக்கு மதிப்பளித்து, உழைப்பிற்கு உரிய கௌரவத்தினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

ஒரு நாடு என்ற வகையில் நாம் அடைய வேண்டிய பொருளாதார சுபீட்சத்திற்காகக் கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடுவதுடன் இன, மத வேறுபாடுகள் அற்ற பொது மானிடச் சுதந்திரத்திற்காக அணிதிரளும் ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, அவர்களின் போராட்டங்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (ஐ)



## இன்டர் மிலன் அணியை வென்றது ஜுவென்டஸ்

இத்தாலியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், இன்டர் மிலன் அணியின் மைதானத்தில், இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் சீரி ஏயின் நடப்புச் சம்பியன்களான ஜுவென்டஸ் வென்றது.

இப்போட்டியின் 13ஆவது நிமிடத்தில் தமது அணியின் டக்ளஸ் கொஸ்டா பெற்ற கோலின் மூலமாக ஆரம்பத்தில் ஜுவென்டஸ் முன்னிலை பெற்றது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில், ஜுவென்டஸின் மாரியோ மண்டுஸிக்கின் முழங்காலுக்கு கீழான பகுதியில் இன்டர் மிலனின் மடியாஸ் வெசினோ உதைய, காணொலி உதவி மத்தியஸ்தரின் உதவியுடன் மத்தியஸ்தர் டானியல் ஓர்ஸட்டோவால் மடியாஸ் வெசினோ சிவப்பு அட்டை காட்டப்பட்டுக் களத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதையடுத்து, 10 பேரோடே விளையாடிய இன்டர் மிலனுக்கு மேலுமொரு அடியாக முதற்பாதியின் இறுதி நிமிடங்களில் ஜுவென்டஸின் பிளெய்ஸி மத்தியூடி கோல் பெற்றதாக மத்தியஸ்தர் டோனியல் ஓர்ஸட்டோ தீர்ப்பு வழங்கினார்.

எனினும் இன்டர் மிலனின் கடுமையான முறைப்பாடுகளைத் தொடர்ந்து காணொலிகளை மத்தியஸ்தர் டானியல் ஓர்ஸட்டோ பார்வையிட்டபோது பிளெய்ஸி மத்தியூடி ஓவ் சைட்டில் இருந்து வந்து கோலைப் பெற்றது தெளிவாகத் தெரிய அந்தக் கோல் இல்லாமல் போக ஒரு கோலால் மாத்திரம் பின்தங்கிய நிலையில் முதற்பாதியை இன்டர் மிலன் முடித்துக்கொண்டது.

பின்னர் இரண்டாவது பாதியின் ஏழாவது நிமிடத்தில், சக வீரர் ஜோவா கான்செலோவின் பிறீ கிக்கைத் தலையால் முட்டிக் மௌரோ இகார்டி கோலாக்க கோலெண்ணிக்கையை இன்டர் மிலன் சமப்படுத்திக் கொண்டது. தொடர்ந்த 13ஆவது நிமிடத்தில், இன்டர் மிலனின் இவான் பெரிசிக்கின் உதை ஜுவென்டஸின் அன்ட்ரியா பர்ஸாலியில் பட்டுக் கோலாக இன்டர் மிலன் முன்னிலை பெற்றுக் கொண்டது.

இதைத் தொடர்ந்து, கோல் கம்பத்திலிருந்து 20 அடி தூரத்திலிருந்து பிறீ கிக் மூலம் ஜுவென்டஸின் சமீர் ஹன்டனோவிக் செலுத்திய பந்தை இன்டர் மிலனின் கோல் காப்பாளர் சமீர் ஹன்டனோவிக் கோல் கம்பத்தின் மேலால் தட்டி விட்டிருந்தார். எனினும் போட்டியின் வழமையான நேரம் முடிவடைய மூன்று நிமிடங்கள் இருக்கையில் ஜுவான் குவராடோ உதைத்த பந்து மிலன் ஸ்கிறினியரிடம் பட்டுக் கோலாக கோலெண்ணிக்கையைச் சமப்படுத்திய ஜுவென்டஸ், அடுத்த இரண்டாவது நிமிடத்தில் பிறீ கிக்கொன்றிலிருந்து வந்த பந்தை தமதணியின் கொன்ஸலோ ஹியூகைன் தலையால் முட்டிக் கோலாக்க 3-2 என்ற கோல் கணக்கில் இறுதியில் ஜுவென்டஸ் வென்றது. (ஐ)

## 11 ஆவது முறையும் நடால் சம்பியன்



உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால் பார்சிலோனா பகிரங்க ரென்னிஸ் கிண்ணத்தை 11ஆவது முறையாகவும் தனதாக்கியுள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில், நடால், கிரேக்க வீரர் ஸ்டெபனொஸ் சிட்டிஸிபாசுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

ஏற்கனவே பத்து முறை பார்சிலோனா கிண்ணத்தைச் சுவீகரித்திருந்த நடால், இந்த முறையும் கிண்ணம் வெல்லவேண்டும் என்ற முனைப்பிலும், நடாலை வீழ்த்தி அவரது கிண்ணக் கனவைச் சிதைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், சிட்டிஸிபாஸ்சும் போட்டியில் களம் கண்டனர்.

எனினும், எல்லோரும் எதிர் பார்த்தபடியே இந்த போட்டியிலும் நடாலின் கையே ஓங்கியிருந்தது. களிமண் தரையில் அவரது ஆக்ரோஷமான ஆட்டம் இந்த போட்டியிலும் தொடர்ந்தது.

அவரது ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத சிட்டிஸிபாஸின் கிண்ணக் கனவு கலைந்து போனது. இந்த போட்டியில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய நடால், 6-2, 6-1 என்ற நேர் செட்களில் மிக இலகுவாக வெற்றி பெற்று மீண்டும் ஒரு முறை பார்சிலோனா பகிரங்க சம் பியனானார். (ஐ)



## அனுஷ்காவைத் திட்டும் கோஹ்லியின் ரசிகர்கள்

கோஹ்லி எந்த ஒரு போட்டியில் விளையாடினாலும் அதனை பார்ப்பதற்கு அனுஷ்கா சர்மா வந்தால், அந்த போட்டி தோல்வியில் முடியும் அல்லது விராட் கோஹ்லியின் ஆட்டம் சொதப்பலாக இருக்கும் என ரசிகர்கள் தொடர்ந்து விமர்சனம் செய்து வந்தனர்.

கடந்த உலககோப்பை போட்டியின் போது கூட 1ரன்னில் கோஹ்லி ஆட்டம் இழந்ததற்கு அனுஷ்கா சர்மாவையே கோஹ்லியின் ரசிகர்கள் திட்டி தீர்த்தனர்.

தற்போது, ஐ.பி.எல்.. போட்டியிலும் அது தொடர்கிறது. கணவனின் ஆட்டத்தை கண்டு ஸ்டேடியத்தில் இருக்கும் அனுஷ்கா அவ்வப்போது முத்தங்களைப் பறக்கவிட்டாலும், அது ரசிகர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது.

சென்னை அணியுடான ஆட்டத்தில் தோல்வி, நேற்று நடைபெற்ற கொல்கத்தா அணியுடனான போட்டியில் தோல்வி என தொடர்ந்து கோஹ்லி தலைமையிலான பெங்களூர் அணி தோல்வியடைந்து வருகிறது.

நேற்று முன் தினம் ஆட்டத்தில் கோஹ்லி அதிரடியாக விளையாடியும், 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பெங்களூர் அணியை, கொல்கத்தா அணி வீழ்த்தியது.

இப்படியே சென்றால், அனுஷ்கா சர்மாவுக்கு வயது ஆன பின்னர் தான் பெங்களூர் அணி வெற்றி பெறும் என அவரது வயதான புகைப்படத்தை வெளியிட்டு டரோல் செய்துள்ளனர்.

மேலும், போட்டியைப் பார்க்க அனுஷ்கா ஸ்ரேடியத்துக்கு வரக்கூடாது என்றும் அல்லது அனுஷ்காவை கோஹ்லி விவாகரத்துச் செய்ய வேண்டும் என ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## லுங்கி இங்கிடிக்கு வாய்ப்பு

டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான லுங்கி இங்கிடி களமிறங்கவுள்ளார்.

தீபக் சாஹருக்கு காயம் ஏற்பட்டதனால், அணியில் இரண்டு வாரங்கள் அவர் விளையாட மாட்டார் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் அவருக்கு பதிலாக லுங்கி இங்கிடி அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

நடப்பு தொடர் மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அறிமுகமான லுங்கி இங்கிடி, தனது முதல் போட்டியில் விளையாடவுள்ளதால் இரசிகர்கள் அவரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

லுங்கி இங்கிடியை நடப்பு தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, இந்திய மதிப்பில் 50 இலட்சம் ரூபாவுக்கு வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ரோஹித் புதிய சாதனை




மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா, ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் புதிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

சென்னை அணிக்கெதிரான போட்டியில், ஆட்டநாயகன் விருது வென்றதன் மூலம், ஐ.பி.எல். தொடரில் அதிகமுறை ஆட்டநாயகன் விருது பெற்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையை பெற்றார்.

ரோஹித் சர்மா இதுவரை 16 முறை ஆட்டநாயகன் விருது பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக டி வில்லியர்ஸ், யூசுப் பதான் ஆகியோரும் 16 முறை ஆட்ட நாயகன் விருது பெற்றுள்ளனர்.

ஐ.பி.எல். தொடரில் அதிகமுறை ஆட்டநாயகன் விருது பெற்ற முதலாவது வீரராக கிறிஸ் கெய்ல் திகழ்கிறார். அவர் 20 ஆட்ட நாயகன் விருது பெற்றுள்ளார். (ஐ)



## பிளிஸ்கோவா சம்பியன்

ஜேர்மனியில் நடைபெற்ற ஸ்டட்கர்ட் பகிரங்க ரெனிஸ் தொடரில், உலகின் ஐந்தாம் நிலை வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவா சம்பியன் பட்டம் வென்றுள்ளார். நடப்பு ஆண்டில் பிளிஸ்கோவா வென்ற முதல் சம்பியன் பட்டம் இதுவாகும்.

நேற்றுமுன்தினம் இறுதிப்போட்டியில், செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா, அமெரிக்காவின் தகுதிநிலை வீராங்கனை கோகோ வாண்டெவெகேவுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

சுமார் 1 மணி, 56 நிமிடங்கள் நடந்த போராட்டத்தில், 7-6 (7-2), 6-4 என்ற நேர் செட்களில் போராடி வென்று கரோலினா பிளிஸ்கோவா சம்பியன் பட்டத்தைத் தனதாக்கினார். (ஐ)

Royal Challengers Bangalore v Mumbai Indians
இன்று
29.04.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர்
Kalaikkathir



# தமிழரின் தாயகத்தில் தேவையற்றது வெசாக்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சாடல்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 01



**"வடக்கு - கிழக்கில் தமிழ்த் தன்மையை இல்லாமல் செய்வதற்கு இராணுவத்தடன் இணைந்து அரசு தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தித் தமிழர் தாயகத்தில் நடத்தும் வெசாக் தின நிகழ்வுகள் எதிர்க்கப்படவேண்டியவை."**

**- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்பதை நிரூபிக்கவே அரசு வடக்கு கிழக்கில் பிரமாண்டமான வெசாக்தினத்தைஇராணுவத்துடன் இணைந்து கொண்டாடியது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2018 ஆம் ஆண்டுக்கான வெசாக் தினம் நேற்று (நேற்று முன் தினம்) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது தமிழர்தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் அனைத்தையும் அரசுடன் இணைந்து இராணுவத்தினரே முழுமையாக ஒழுங்கமைத்திருந்தார்கள்.

ஒரு மதம் என்பது அரசுடன் சம்பந்தப்பட்ட விடயமாக இருக்க முடியாது. அவ்வாறு இருக்கவும் கூடாது. அந்த வகையில் தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கில் அரசின் முழு ஒத்துழைப்போடும், விசேடமாக இராணுவத்தின் முழுமையான ஒழுங்கமைப்போடும் பிரமாண்டமான வகையில் வெசாக் தினத்தைக் கொண்டாடியிருப்பது கண்டிக்கத்தக்கது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் மதத்தைத் திணிக்கும் வகையில்தான் இராணுவத்தினால் நடத்தப்பட்ட வெசாக் தின நிகழ்வு அமைந்துள்ளது.

இதுமட்டுமல்லாமல் பல்கலைக்கழக விடுமுறைதினத்திலும், அங்கு கல்விகற்கும்சிங்களமாணவர்கள் அவர்களுடைய சொந்த ஊர்களுக்குச் சொல்லாமல் தடுப்பதற்காக அவர்களுடைய குடும்பங்களை வடக்கு - கிழக்குப்பிரதேசங்களுக்கு அரசசெலவில் அழைத்து வந்து, வெசாக்தினத்தைக் கொண்டாட வைக்கும் அளவுக்குஅரசஇயந்திரம் இம்முறை வெசாக் நிகழ்வுகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது - என்றார். (ஐ-7)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேதினம் கிட்டு பூங்காவில் இன்று

யாழ்ப்பாணம், மே 01

தமிழ் தேசியத்தின் கொள்கைக்காக மே தினமான இன்று நல்லூர் கிட்டுப் பூங்கா வளாகத்தில் ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்:-

சர்வதேசதொழிலாளர் தினத்தை அதற்குரிய மே முதலாம் திகதியே கொண்டாடுவதாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது. இதன்படி இன்று யாழ்ப்பாணம் கிட்டுப்பூங்காவளாகத்தில் இதனைக் கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் உள்ள சட்டநாதர் ஆலயத்தில் இருந்து மாலை 3 மணிக்கு பேரணி ஆரம்பித்து கிட்டு பூங்காவை வந்தடையும். அங்கு மேதினக்கூட்டம்நடைபெறும்.

இதில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எமது கட்சியின்கொள்கைகளை ஏற்றுச் செயற்படுகின்றவர்கள், எமக்கு வாக்களித்து ஆதரவு தந்து கொண்டிருக்கும் மக்கள் அனைவரையும் அரவணைத்து தொழிலா ளர் தினத்தைக் கொண்டாட விரும்புகின்றோம் - என்றார். (ஐ-7)

# உருக்குலைந்த நிலையில் சடலம்

கொழும்பு, மே 01

மஹியங்கனை நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குப் பிரதேசவாசி ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், சடலமாக மீட்கப்பட்டவர், சுமார் 50 - 60 வயதுடையவர் என சந்தேகிக்கப்படுவதோடு, சடலத்துக்கு அருகில் இருந்து மதுபானப் போத்தல் மற்றும் விஷப் போத்தல் ஒன்றையும் பொலிஸார் கண்டுப்பிடித்துள்ளனர். (ஐ)

# காபூல் தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்

கொழும்பு, மே 01

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களுக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கை அரசு தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ள அரசு,முட்டாள்தனமான இந்தத் தாக்குதலில், காயமடைந்தவர்கள் விரைவில் நலம்பெற வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

காபூலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 8 ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட, 29 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய நாணயத் தாள்களை அச்சிட்டுக் குவிக்கும் அரசு

கடந்த மார்ச் மாதமும், இந்த மாதமும், மாத்திரம் ஆயிரம் கோடி ரூபா நாணயத் தாள்கள் இலங்கை அரசினால் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவே அமெரிக்க டொலரின் பெறுமதி, 160 ரூபாவை விட அதிகரித்தமைக்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது.

அரசின் செலவீனம் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கொடுப் பனவுகள் என்பவற்றுக்காக இவ்வாறு பணம் அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் டொலரின் பெறுமதி இன்னும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகவும், சர்வ தேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கவுள்ள அடுத்த கட்ட கடன் உதவி மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகக் குத்தகையின் மீதிப் பணம் என்பவற்றை வழங்கவுள்ளதன் காரணமாக, குறுகிய காலப்பகுதிக்குள் இந்தப் பண வீக்கம் கட்டுப்படுத்தப்படலாம் எனவும் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அமைச்சரவை மறுசீரமைப்பு பிரச்சினைக்குத் தீர்வாகாது

## கூறுகிறார் விஜித ஹேரத்

நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சரவைச் சீர்திருத்தம் தீர்வல்லவென மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

களனிப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வென்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்எழுப்பிய கேள்விக்குப்பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அமைச்சரவை மறுசீரமைப்பும் புதிய அமைச்சரவை நியமனமும் நகைச்சுவையாக மாறியுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# ஐ.தே.க. தலைமையில் மாற்றம் அவசியமானது

## ரங்கே பண்டார விடாப்பிடி

கொழும்பு, மே 01

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிட்ட போது, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புகுறித்து திருப்திகொள்ளமுடியாது. எனினும் கட்சியைப் பலமாக்குவதற்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும்.

கட்சியின் தலைமைப் பதவி முதல் அனைத்து விடயங்களிலும் மாற்றம் எதிர்பார்க்கப்பட்டது.

மக்களின் நிலைப்பாடு குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும். கட்சியின் பதவிகள் ஒரே கும்பலினால் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சீட்டாடும்போது விளையாடுவோர் மாறமாட்டார்கள், சீட்டுகளே மாறும். இம்முறை சீட்டுக் கட்டின் சீட்டுக்கள் ஒரே கும்பலின் கைகளுக்குச் சென்றுள்ளன.

கட்சியில் முழு அளவிலான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும், அது தலைமைத்துவப் பதவியிலிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றார். (ஐ)

# ஐ.தே.கவை விட்டு விலகிய உறுப்பினர்களுக்கு அழைப்பு

கொழும்பு, மே 01

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகிய உறுப்பினர்கள், மீண்டும் அந்தக் கட்சியில் இணைந்துக்கொள்ள வேண்டும்எனக்கட்சியின் பொதுச் செயலாளரும் கல்வி அமைச்சருமான, அகிலவிராஜ் காரியவசம் திறந்த அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளராகப் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், தனது கடமைகளை எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி பொறுப்பேற்றதன் பின்னர், இது தொடர்பில் உத்தியோகப்பூர்வ அழைப்பு விடுக்கப்படும் எனவும் கூறினார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க எம்.பியும், கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணைந்திருக்கும் உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஐ)

# சுதாகரைச் சிறையில் சந்தித்து கண்ணீர் விட்டனர் பிள்ளைகள்

அரசியல் கைதி, ஆனந்த சுதாகரன் நேற்றுத் திங்கட்கிழமை விடுதலையாவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர்விடுதலைசெய்யப்படவில்லை என அருட் தந்தை சக்திவேல் கூறினார்.

நேற்றுத்திங்கட்கிழமை கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்குச் சென்ற ஆனந்த சுதாகரனின் இரண்டு பிள்ளைகளும், அவரைப் பார்வையிட்டு உரையாடி, கண்ணீர் சிந்தி அழுதனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சித்திரைப் புதாண்டுக்கு முன்னர் ஆனந்த சுதாகரன் விடுதலை செய்யப்படுவார் எனஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருந்தார். ஆனால் சித்திரைப் புத்தாண்டு முடிவடைந்து இரண்டு வாரங்கள் சென்ற நிலையிலும் அவர் விடுதலைசெய்யப்படவில்லை.

நேற்றுத்திங்கட்கிழமை வெசாக் பண்டிகை என்பதால், தந்தை விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையில், இரு பிள்ளைகளும் கொழும்புக்கு வந்தனர் எனவும், ஆனால் விடுதலை செய்யப்படுவதற்கான உத்தரவு, சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து கிடைக்கவில்லை எனச் சிறைச்சாலை அதிகாரிகள் கூறினர் எனவும் அருட்தந்தை சக்திவேல் கவலையுடன் தெரிவித்தார்.

இதனால், ஏமாற்றம் அடைந்த நிலையில் இரண்டு பிள்ளைகளும் மீண்டும் கிளிநொச்சிக் குச் சென்று விட்டனர் என்றும், ஜனாதிபதி இரண்டு பிள்ளைகளையும் ஏமாற் றி விட்டார் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அதேவேளை, சிறைச்சாலையில் தமது தந்தையைப் பார்வையிட்ட இரண்டு பிள்ளைகளும் கண்ணீர் விட்டு அழுது புலம்பினர் எனவும், தங்களுக்கு அப்பா வேண்டும் என்று, சிறைச்சாலை அதிகாரிகளிடம் வலியுறுத்தி உருக்கமாக கோரிக்கை விடுத்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது